Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 04 வியாழக்கிழமை (18.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 182

சாவகச்சேரியில்
## இராணுவம் திடீர் சோதனை

(சாவகச்சேரி)
சாவகச்சேரி - கச்சாய் வீதிப் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. தம்புதோட்டம் 523 ஆவது படை முகாமை அண் 23

வல்வெட்டித்துறையில்
## கிணற்றிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

(கரணவாய்)
வல்வெட்டித்துறை நெற்கொழு வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து மேலும் ஒரு துப்பாக்கி மற்றும் மூன்று குண்டுகள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது. 23

நாட்டின் இறைமையை பாதிக்கும் வகையில்
# தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்படமாட்டாது
## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)
நாட்டின் இறைமையை பாதிக்கும் வகையில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்கப்படாது என அரச தரப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

| கொரோனா வைரஸ் | பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | குணமடைவு | பலி |
|---|---|---|---|---|
| | 1,924 | 09 | 1,397 | 11 |

## தேர்தல் விதியை மீறினால் கடும் சட்ட நடவடிக்கை
### யாழ்.மாவட்ட அரச அதிபர் மகேசன்



(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். 23

பேராசிரியர்
முருகர் குணசிங்கம்
எழுதும்
**"புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு"**
இன்று முதல் உங்கள்
வலம்புரியில்

முல்லை தண்டுவான் பகுதியில்
## நில அளவை திணைக்களத்திற்கும் மக்களுக்கும் இடையே முறுகல்



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்மக்களின் காணிகளை அபகரித்து எல்லைப்படுத்தும் நடவடிக்கையில் மாவட்ட நில அளவைத்திணைக்களம் ஈடுபட்டுள்ளமைக்கு மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தண்டுவான் பகுதியில் நில அளவைத்திணைக்களத்தின் நடவடிக்கை ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட போது மக்கள் எதிர்ப்பு 23

ஒரு வன்முறைச் சம்பவம் உட்பட
# 15 தேர்தல் விதிமுறை மீறல்கள் யாழில் முறையிடப்பட்டுள்ளது
உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமலராஜ் 23

மணல் அகழ்விற்கு தடை
## பாரவூர்தி உரிமையாளர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, மணற்காட்டு பகுதியில் மணல் அகழ்வதற்கு உள்ளூர் பாரவூர்த்தி உரிமையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து நேற்று புதன்கிழமை காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மணற்காட்டுப் பகுதியில் உள்ளூர் பாரவூர்த்தி 23

## புலோலி காந்தியூர்ப் பகுதியில் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்
### வர்த்தக நிலையமும் சேதமாக்கப்பட்டது

(கரணவாய்)
வடமராட்சி புலோலி காந்தியூர் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவமொன்றில் இருவர் வாள்வெட்டிற்கு இலக்கானதுடன் வர்த்தக நிலையம் ஒன்றும் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளது. நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஏற்கனவே பகைமை கொண்ட இரு சாராருக்கு இடையே இச் 23

## வடமராட்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர்
### சவுதியில் கொரோனாவுக்கு பலி



(கரணவாய்)
கொரோனா தொற்று காரணமாக வடமராட்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சவுதி அரேபியாவில் மரணமடைந்துள்ளதாக அவரது உறவினர் 23

யாழ். நல்லூர்ப் பகுதியில்
## தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட 16 பேர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாமல் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட 16 இளைஞர்கள் நேற்று மாலை யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. 23

# சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான பின்புலம் ஏற்படுத்தப்படும்

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி

(கொழும்பு)

**சுகாதாரப் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான சூழலை ஏற்படுத்தித் தருவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.**



கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதற்கான பரிந்துரைகள் சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் வரலாற்றில் இத்தகையதொரு சூழலில் இடம்பெறும் முதலாவது தேர்தல் இதுவாகும். எனவே சுகாதார பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கி தேர்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்குமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுகாதார பாதுகாப்பானதும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவது குறித்து கலந்துரையாடுவதற்காக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தின் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே இதுபற்றி தெரிவிக்கப்பட்டது.

கோவிட் - 19 நோய்த் தொற்றை ஒழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்ட வகையில் சில மாதங்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. அது தேர்தலை எதிர்பார்த்தன்றி மக்களையும் நாட்டையும் இந்த ஆட்கொல்லி நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். சில மாதங்களாக பின்பற்றிய சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த நிலைமை குறித்து மக்கள் தெளிவுடன் இருப்பதன் மூலம் எவ்வித சுகாதார பிரச்சினையுமின்றி தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியுமென்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

தேர்தலுக்கான அடிப்படை திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட ஏனைய அனைத்து தரப்பினரதும் பங்களிப்பை பெற்றுக் கொள்வதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக்காக அதிகாரிகளின் கட்டாயமான பங்கேற்பை உறுதி செய்வதற்கு சட்டரீதியான அடிப்படையொன்றை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

அதன் பணிப்புரைகளை தாபனக் கோவையில் உள்ளடக்க வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். மக்கள் கூட்டங்களில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை மற்றும் வீடுகளுக்கு சென்று செய்யப்படும் பிரசாரத்தின் போதான சுகாதாரப் பாதுகாப்பு குறித்து அனைத்து தரப்பும் பொறுப்புடன் செயற்படுவது தேர்தலை வெற்றிகரமாக செய்வதற்கு உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் கோவிட் - 19 ஒழிப்பு பரிந்துரைகளை வர்த்தமானி மூலம் அறிவிக்க வேண்டியதன் அவசி யத்தையும் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

சுகாதார சட்ட திட்டங்களுக்கு ஏற்ப வாக்களிப்பு நிலையங்களில் இடவசதி பிரச்சினை ஏற்பட்டால் தேவையான உதவியை வழங்குவதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். ஜூலை மாதம் 31ஆம் திகதி முதல் ஊர்களுக்கு செல்லும் மற்றும் தேர்தலின் பின்னர் மீண்டும் வருகை தரும் மக்களுக்கான போக்குவரத்து வசதிகளை திட்டமிடுவது குறித்தும் மகிந்த தேசப்பிரிய கவனத்திற்கு கொண்டு வந்தார். (ம-3)

## நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின்

# முறைகேடுகளைக் கண்டறிய மூவர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

நிதி நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபள்யூ.டி. லக்ஷ்மன் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர இக்குழுவின் தலைவராக செயற்படுவதுடன், இலங்கை மத்திய வங்கியின் சட்டத்துறை பணிப்பாளர் கே.ஜி.பி.சிறிகுமார மற்றும் மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களை முகாமைத்துவம் செய்யும் பிரிவின் பணிப்பாளர் ஜே.பி.கம்லத் ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

குறிப்பாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் பினான்ஸ் மற்றும் லீசிங் வழங்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி நிறுவனங்களினால் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றபோது இடம்பெறும் சமூகம் அங்கீகரிக்காத செயற்பாடுகள் மற்றும் இவை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பது பற்றியும் கண்டறிந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குமாறு குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழு அதன் அறிக்கையை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், வங்கித்துறை மற்றும் சட்டத்துறை நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை தொடர்புகொண்டு இந்த அறிக்கையை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு மத்திய வங்கி ஆளுநரினால் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை காலை 09 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வங்கி அலுவலகத்தில் இரத்ததான முகாம் நிகழ்வு இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாமில் அனைத்து குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்ததான ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-3,18)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603,**
**021 567 1532**

# முல்லை ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

## நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம் 100 பேர் பங்குபற்ற அனுமதி

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கோயில் திருவிழாவில் 100 பேர் வரை பங்குபற்ற அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர்க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய திருவிழா தொடர்பான ஊடக சந்திப்பு ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது

அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய திருவிழா நாளை 19ஆம் திக்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சகல தரப்பினருடனான முன்னோடிக் கூட்டம் கடந்த 15ஆம் திகதி நடத்தப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு 16 நாட்கள் திருவிழா நடைபெறும்.

வருடாந்த திருவிழாவினை சம்பிரதாய முறையில் தடை இல்லாமல் மக்கள் கலந்து கொள்ளாதவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மக்களின் நேர்த்திக் கடன்களை பிறிதொரு தினங்களில செய்தால் கொரோனா பரவலை தடுக்கமுடி யும்.

12 நாட்கள் மக்கள் செறிவு இல்லாத விழாவாக சாதாரண பூசையாக இடம்பெறும். இறுதி நான்கு நாட்கள் மக்கள் அதிகளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்

வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா போன்ற விழாக் காலங்களில் மக்கள் வருவார்கள் என்று எதிர்பாக்கின்ற கார ணத்தினால் அதற்கான பாதுகாப்பினை வழங்க தீர்மானித் துள்ள்துடன் மக்கள் வரவை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

வேட்டைத் திருவிழாவுக்கு நேர்த்திக் கடனுக்காக வருபவர்கள் முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளனர். நிர்வாகம் மட்டும் தான் கலந்து கொண்டு திருவிழா வினை செய்வார்கள். தேர்த் திரு விழாவும் சிறிய தேரினை குறைந்த ஆட்களை வைத்துக் கொண்டு இழுப்பதாக தீர்மானிக் கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தத்தில் 100 பேரை வைத்துக் கொண்டு திருவிழாவினை செய்ய தீர்மானிக்கப்படடுள்ளது என்றார. (ம-3,281)

# பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்கள் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர்






(யாழ்ப்பாணம்) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனத்தினை மீள வழங்குமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ்.அரச அதிபர் ஊடாக நேற்று மகஜர் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்கள் நேற்றுக்காலை 10 மணியளவில் ஒன்றுகூடி ஜனாதிபதிக்கான மகஜரை அரசாங்க அதிபர் க.மகேசனிடம் கையளித்தனர்.

எமக்கு தகுந்த தீர்வினைப் பெற்றுத்தரும் வகையில் ஆவன செய்து தருமாறு தாழ்மையுடன் அகில இலங்கை பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம் என்று குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகஜரை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் இதனை உரிய முறையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக செயற்றிட்ட உதவியாளர்களிடம் உறுதியளித்தார். (ஜ-8)

## போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 44 ஆயிரம் பேர் கைது

# இலங்கையை போதைப்பொருளற்ற நாடாக மாற்றுவதே எம் எதிர்பார்ப்பாகும்



### பிரதிப் பொலிஸ்மா அதிபர் திட்டவட்டம்

**(கொழும்பு)**

**நாட்டில் 6 மாதகாலத்தில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய சுமார் 44 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் சட்டங்களை இறுக்கமாக்குவதன் ஊடாக போதைப்பொருட்களற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அதுவே எமது எதிர்பார்ப்பாகும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் சைபர் இணைய வழிக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்குரிய பொறுப்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கே இருக்கிறது. அந்தவகையில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் கணனியுடன் தொடர்புடைய குற்றச்செயல்களை ஆராய்வதற்கு தற்போது சகல நவீன வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதுமாத்திரமன்றி இவை குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நன்கு பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஆரம்பத்தில் கொழும்பில் மாத்திரமே சைபர் இணையவழிக் குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடளிக்கக்கூடிய வசதி காணப்பட்டது. தற்போது அதற்கு மேலதிகமாக பலாங்கொடையிலும், மாத்தளையிலும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் இரண்டு கிளைகள் உருவாக்கப்பட்டிருப்பதுடன், அங்கும் இதுபற்றிய முறைப்பாடுகளைச் செய்யமுடியும். இவற்றுக்கு மேலாக கணனியுடன் தொடர்புடைய குற்றச் செயல்கள் பற்றிய சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டிருக்கின்றோம்.

அடுத்ததாக போதைப் பொருள் குற்றங்களைப் பொறுத்தவரையில் 6 மாதகாலத்தில் ஹெரோயின், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் கடத்தல் குற்றச்செயல்களில் ஈடுபட்ட சுமார் 44 ஆயிரம் பேரைக் கைது செய்திருக்கின்றோம். அதேபோன்று சுமார் 8 ஆயிரம் கிலோகிராம் பெறுமதியான ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இத்தகைய குற்றச்செயல்கள் சிறைச்சாலைகளுக்குள் நடைபெறுகின்றன.

நாட்டில் 1929 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போதைப் பொருள் தொடர்பான சட்டமே தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது. எனினும் 1984 ஆம் ஆண்டில் இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்ட மிகமுக்கிய திருத்தத்தின் ஊடாகவே போதைப்பொருள் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கக் கூடிய நிலையேற்பட்டது.

எனவே தற்போது அச்சட்டத்தில் மேலும் இறுக்கமான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம்.

அவற்றின் ஊடாக போதைப்பொருளற்ற நாடொன்றாக இலங்கையை மாற்றியமைப்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)



# இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக ஜீவன் தொண்டமான்

(கொழும்பு)
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய பொதுச் செயலாளராக ஜீவன் தொண்டமானும், உப தலைவராக அனுசா சிவராஜாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து கட்சியின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக இடைக்கால நிர்வாக சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த இடைக்கால நிர்வாக சபை நேற்று புதன்கிழமை ஒன்றுகூடிய நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் கட்சித் தலைமைத்துவத்துக்கு யாரும் நியமிக்கப்படவில்லை. முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு வெற்றிடம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# அதிபர், ஆசிரியர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே
# க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் இறுதித்திகதி அறிவிக்கப்படும்

## கல்வியமைச்சு அறிக்கை

(கொழும்பு)

**கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்து அவை தொடர்பில் ஆராய்ந்த பின்னரே உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் தினம் பற்றிய இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் அறிக்கையொன்றினை வெளியிட்டு இதனைத் தெரிவித்திருக்கும் அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொவிட்-19 பரவல் காரணமாக இவ்வருடம் மிகக் குறைவான நாட்களே பாடசாலைகள் நடத்தப்பட்டன. அதன் காரணமாக பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாமல் போன காரணத்தினால் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் பெரும் சவாலுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

அதனைக் கருத்திற் கொண்டு உயர்தர பரீட்சைகளை ஒத்தி வைக்குமாறு பெரும்பாலானவர்களால் கல்வி அமைச்சர் மற்றும் அமைச்சிடம் தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

நாட்டில் காணப்படும் நிலவரத்தில் இந்த கோரிக்கையை பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அடிப்படை உரிமையாகக் கருதி இது தொடர்பில் மேலும் ஆராயப்பட்டது.

அதற்கமைய தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதைப் போன்று செப்டெம்பர் 7 ஆம் திகதி உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது மாணவர்களுக்கு ஏற்புடையதாக இருக்குமா? என்று ஆராயுமாறு கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும பரீட்சைகள் ஆணையாளர் உள்ளிட்ட கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டவுடன் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்து அவை தொடர்பில் ஆராய்ந்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சையை நடத்துவதற்கான இறுதித் திகதி அறிவிக்கப்படும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்



(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்யும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் தினங்களில் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலைகளை சுத்தம் செய்து முடிக்கவுள்ளதாகவும் ஜூன் 29 ஆம் திகதி முதல் ஜூலை 5 ஆம் திகதி வரையில் ஏனைய பாடசாலைகளை சுத்தம் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# பாடசாலை மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் அடுத்த மாதம் முதல் திறக்கப்படவுள்ளன.

ஜூலை மாதம் 6 ஆம் திகதி முதல் நான்கு கட்டங்களின் கீழ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனால் மாணவர்களின் போக்குவரத்து தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் விசேடமாக போக்குவரத்து சேவை வழங்கும்போது சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆசன எண்ணிக்கைகளுக்கு மாத்திரம் மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் போது சுகாதாரப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கேற்ப சமூக இடைவெளியை பின்பற்றி ஆசனங்களின் எண்ணிக்கைகளுக்கமைய மாத்திரம் மாணவர்களை அழைத்து செல்லுதல், பாடசாலை மாணவர்கள் பயணித்த வாகனங்களில் கிருமி நீக்கம் செய்தல், மாணவர்கள் அனைவரும் முகக் கவசம் அணிந்திருத்தல் போன்ற சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு பதிவாளரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னாயத்தமாக தொற்று நீக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குமிடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக விடுதிகளில் இருந்து தங்கள் உடைமைகளை எடுத்துச்செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்கள் விடுதிக்குரிய உப காப்பாளரைத் தொடர்புகொண்டு உடைமைகளை எடுப்பதற்கான நேரம் மற்றும் திகதிகளை ஒதுக்க முடியும் என்றும் குறித்த காலப்பகுதியினுள் தங்கள் உடைமைகளை ஏதும் தவிர்க்க முடியாத காரணத்தால் எடுத்துச் செல்ல முடியாத மாணவர்கள் முற்கூட்டியே தங்கள் விடுதிக்குரிய உப காப்பாளரைத் தொடர்புகொண்டு அறிவிக்க வேண்டும் என்றும் யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# தனியார் வகுப்புகளை இடைநிறுத்த அறிவுறுத்து

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது பிரத்தியேக மற்றும் தனியார் கல்வியகங்களில் மாணவர்களை ஒன்று திரட்டி வகுப்புகள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் அனைத்து வகுப்புகளையும் உடனடியாக நிறுத்துமாறு திருகோணமலை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நேற்று புதன்கிழமை அறிவித்தல் வழங்கியுள்ளது.

குறித்த அறிவித்தலை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

நாட்டு மக்களிடையே கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான அச்சம் படிப்படியாக குறைந்துவருவதோடு, பொது மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றனர். அதனடிப்படையில், இம்மாதம் 29 ஆம் திகதி முதல் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# இந்தியாவிலிருந்து 53 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் இந்தியாவின் தமிழ் நாட்டில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த 53 இலங்கைப் பிரஜைகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய, ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றின் ஊடாக, அவர்கள் நேற்று அதிகாலை 4.30 அளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வருகை தந்தவர்களில் 51 முதியவர்கள் மற்றும் 2 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். இதன்படி, அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பரிசோதனைப் பெறுபேறுகள் கிடைக்கும் வரை விமான நிலையத்திற்கு அருகிலுள்ள விடுதியொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சர்வதேச கப்பல் நிறுவனத்தில் சேவை புரியும் 30 இந்தியப் பிரஜைகள் விசேட விமானமொன்றின் மூலம் நேற்று முன்தினம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# உழவு இயந்திரம் தடம் புரண்டது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான் பாலத்தில் சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று ஆற்றுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி மயிரிழையில் உயிர்தப்பினார்.

நேற்று முன்தினம் மாலை கிரான் - புலிபாய்ந்தகல் வீதியால் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரமே இவ்வாறு ஆற்றினுள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. (ஐ-4)

## இராசிபலன்

18.06.2020
ஆனி 04, வியாழக்கிழமை
துவாதசி முற்பகல் 10.26 மணிவரை
பரணி முற்பகல் 9.30 மணிவரை
சுபநேரம் 7.23-8.53 மணிவரை
இராகுகாலம் 1.23-2.33 மணிவரை
சந்திராஷ்டமம்: சுவாதி
கார்த்திகை விரதம், பிரதோச விரதம்

வளவன்

**மேஷம்**
மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டு வீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
வேலைச்சுமை கூடும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மனச்சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு, சயனக்குறைவான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**கடகம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**சிம்மம்**
முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி**
புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**துலாம்**
கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானங்கள் திருப்தி தரும்.

**விருச்சிகம்**
தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு, மனக்குழப்பங்கள் அகலும்.

**தனுசு**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.

**மகரம்**
பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாடு பெருமை சேர்க்கும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு.

**மீனம்**
எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாக்கு மேன்மையுண்டு.

வீணாக உன்னையே நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கிக் கொள்ளாதே!

# சிறைச்சாலை அதிகாரிகள் பலருக்கு அதிரடி இடமாற்றம்!

(கொழும்பு)

**சிறைச்சாலைகளிலிருந்து குற்றச்செயல்கள் வழிநடத்தப்படுவதாக எழுந்துள்ள பரவலான குற்றச்சாட்டுக்களையடுத்து, சிறைத்துறைக்குள் பலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.**


இதன்படி, 9 சிறைக் கண்காணிப்பாளர்கள், 6 உதவி சிறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் மற்றும் 9 உதவி காவல் கண்காணிப்பாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

சிறைச்சாலை அமைச்சின் செயலாளரால் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலின் பேரில் இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் வெலிகட, மகசீன், போகம்பர, பதுளை, வாரியபொல, அங்குனகொலபெலஸ மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளின் கண்காணிப்பாளர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகாயமடைந்தவர்களுக்கு விசேட சிகிச்சைகள் முன்னெடுப்பு

## பேராயரின் யோசனைக்கமைய நடவடிக்கை



(கொழும்பு)

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் படுகாயமடைந்த 39 பேருக்கு தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்தின் செலவில் விசேட சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் படுகாயமடைந்து, கை அல்லது கால்களை இழந்த சிறுவர்கள், முதியவர்கள் உள்ளிட்ட 39 பேருடைய விசேட சிகிச்சைகளுக்கு உதவும் வகையிலான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு பேராயர் சுகாதார அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளதாவது, இந்த குண்டுத் தாக்குதல்களால் நூற்றுக் கணக்கான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அத்தோடு மேலும் பலர் கை, கால்களை இழந்து படுகாயமடைய நேர்ந்தது. அவ்வாறு காயமடைந்தவர்களில் 139 பேர் தற்போதும் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதோடு அவர்களில் 39 பேருக்கு நீண்ட கால விசேட மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு விசேட சிகிச்சை பெற வேண்டியவர்கள் தொடர்பில் பேராயரினால் எமக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த 39 பேருக்கும் அரசாங்கத்தின் செலவில் சிகிச்சைகளை முன்னெடுப்பதற்கு உதவி செய்யுமாறு பேராயரினால் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய அமைச்சர் , ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையூடாக அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் உள்ளிட்ட விசேட வைத்தியர்கள் குழுவின் கீழ் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சரின் முழுமையான கண்காணிப்பில் குறித்த 39 பேருக்கும் மேலும் சில சிகிச்சை பெற வேண்டிய தேவையுடையோருக்கும் உரிய விசேட சிகிச்சைகளை அளிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு இவர்களுக்கு எதிர்காலத்தில் வழங்கப்பட வேண்டிய மருத்துவ சிகிச்சைகளுக்கான அனைத்து செலவுகளையும் சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பேராயரிடம் தெளிவுபடுத்துவதற்காகவும் சிகிச்சைகளுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடுவதற்காக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் பேராயரை சந்தித்தார்.

இந்த சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த பேராயர் தமது கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுத்தமைக்கு அரசாங்கத்திற்கும் சுகாதார அமைச்சருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# புகையிலை செய்கைக்கு பதில் மாற்று பயிர்ச்செய்கையில் மக்கள் ஆர்வம்

## வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் தீவகப் பகுதியில் புகையிலை செய்கைக்கு பதிலாக மாற்று பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாக வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.**



புகையிலை பயிர்ச் செய்கையினை நாட்டில் தடை செய்து புகையிலைக்கு மாற்றுப் பயிர்ச் செய்கையை நடைமுறைப்படுத்தும் கொள்கைக்கு இணங்க யாழ்ப்பாணம் தீவகப் பகுதியில் புகையிலைக்குப் பதிலாக மாற்றுப் பயிர்கள் விவசாயத்திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனையடுத்து மக்கள் அப்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பானம் தீவகத்தில் தற்போதைய விவசாய நிலைமைகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் புகையிலைச் செய்கையில் இருந்து விடுபட வேண்டும் என்பது மக்களுடைய விருப்பம். அது தொடர்பில் மாற்றுப் பயிர்ச்செய்கையை மக்கள் மேற்கொள்ள தாங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போது மிளகாய் செய்கையினைப் பொறுத்தவரை உலகளாவிய ரீதியில் மிகுந்த வரவேற்பு காணப்படுகின்றது. கொவிட்-19 தொற்றுக்கு பின்னர் செத்தல் மிளகாய் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மிளகாய் செய்கை ஒரு மாற்று தீர்வாக அமையும். அதேபோல் கற்றாழை பயிர்ச் செய்கையும் தீவகப் பகுதியில் மேற்கொள்வதற்காக விவசாயத் திணைக்களம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதைத் தவிர விவசாய ஆராய்ச்சி நிலையம் ஊடாக விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் விவசாயிகள் அதிகள்வு வருமானத்தை பெறக்கூடிய நிலை உருவாகும்.

விவசாயிகள் அதிக வருமானத்தை பெறக்கூடிய நிலை ஏற்படுவதுடன் சாமை போன்ற இதர பயிர்ச்செய்கைகளையும் மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சாமை போன்ற பயிர்ச்செய்கையில் அதிகளவு கவனத்தைச் செலுத்தினால் விவசாயிகள் அதிகளவான வருமானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (4-5-8)

## அர்ப்பணிப்புமிக்க சேவையாளன் செயல் வீரன் ரங்கராஜா

### யாழ்.அரச அதிபர் இரங்கல்



(யாழ்ப்பாணம்)

அமரர்.சிவகுரு ரங்கராஜாவின் மறைவு அனைவருக்கும் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

பன்முக ஆற்றல் கொண்ட அமரர்.சிவகுரு ரங்கராஜா தன்னுடைய தனித்திறமையினால் அனைவரது மனங்களையும் வெற்றிகொண்டதோடு நிர்வாக ரீதியாக மிகச்சிறப்பான முறையிலே செயற்பட்டு அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்திருந்தார்.

பல நிர்வாகிகளை உருவாக்கியும் ஆற்றுப்படுத்தியும் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை இம்மண்ணிற்கு ஆற்றியுள்ளார் என யாழ்.அரச அதிபர் க.மகேசன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் இரங்கல் செய்தியில்,

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிறுவுதலிற்கும் வினைத்திறனான சேவை முன்னெடுப்பிற்கும் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை தொடர்ச்சியாக வழங்கியிருந்தார்.

அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு திட்ட நடைமுறைகளை உருவாக்குவதிலும் அவற்றை முன்னெடுப்பதிலும் உரிய நோக்கம் தவறாது பயனுறுதி மிக்க செயல் வடிவம் கொடுப்பதிலும் அதன் சாதக, பாதக தன்மைகளை உய்த்தறிந்து மக்கள் பயன்பெறத்தக்க வகையிலும் செயற்படுத்தி ஒரு செயல் வீரனாகவே மிளிர்ந்திருந்தார். இச்செயற்பாடுகளினூடு பன்முக ஆளுமை விருத்தியை வளர்த்தெடுப்பதில் காத்திரமான பங்களிப்பை உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்தார்.

திட்டமிடல்சார் நிரம்பிய அறிவாற்றலும் நிர்வாக விடயங்கள் சார்ந்த புலமையும் தன்னகத்தே கொண்டு தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபராக, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக, வடக்கு-கிழக்கு மாகாண மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளராக மட்டுமன்றி நியாப், நிகொட், நெக்டப் மற்றும் நேர்ப் போன்ற திட்டங்களை சிறந்த முறையில் உருவாக்கி, நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டவருமாவார்.

அன்னாரது இழப்பு அவருடைய குடும்ப உறவுகளுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்குமான பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அன்னாரது இழப்பால் தவிக்கும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என யாழ்.அரச அதிபர் க.மகேசன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.(2-5)

## 24 பேருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுக் குழுத்தலைவனின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக ஒன்றுகூடிய நிலையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டவர்களில் 24 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 பேர் 16 வயதிற்குட்பட்டவர்கள் என்பதால் அவர்கள் இருவரும் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-32)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட 69992870 இலக்க துவிச்சக்கரவண்டி இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகிறது.

எனவே குறித்த சான்றுப் பொருளினை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2020.08.15 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)



**சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது இங்கிலாந்தில் வசிப்பவருமான வா.சுபாஸ்கரன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 21 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கினார். (படம்:-அளவெட்டி செய்தியாளர்)**




**எழுத்தாளர் திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய உலகின் முதலாவது ஆன்மீக, சமூக, விஞ்ஞான ஆய்வு நூலான "பிரபஞ்சத்தில் மணி" நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணியர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:- செ.ரவிசாந்)**

## "கலாதரம்" பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் 2020 ஆண்டு கலாதரம் எனும் பிரதேசமலர் வெளியிடப்படவுள்ளமையால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசம் சார்ந்த விடயங்கள் மற்றும் கலை பண்பாட்டம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடக்கிய ஆக்கங்கள் எதிர்வரும் 15.07.2020 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கிடைக்கப் பெறும் ஆக்கங்கள் அனைத்தும் மலர்க்குழுவின் தீர்மானத்தின் பின்னரே பிரசுரிக்கப்படும் என்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.யூ.யசோதா அறிவித்துள்ளார். (5)

# நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசு மக்கள் பக்கமே இருக்க வேண்டும்

## சந்திம வலியுறுத்து



(கொழும்பு)

**சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை முன்னேற்றாமல் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட வேட்பாளர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் ஊடக நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இறக்குமதி வருமானம் குறைவடைந்துள்ளமை சிக்கல் எனவும் சிறிய கைத்தொழிலாளர்களுக்கு தங்களது வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும்,

அரசாங்கம் எப்போதும் மக்களின் பக்கம் இருக்க வேண்டும் என்றும் மக்களை முன்னேற்றாமல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சுற்றிவளைப்பில் 404 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 5 மணிவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 404 பேர் கைது செய்யப்பட்டனர்.

143 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 170 பேரும் கஞ்சா போதைப் பொருளுடன் 77 பேரும் ஐஸ் ரக போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த 14 பேரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ்மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு இலவச விடுமுறைப் பொதி



(கொழும்பு)

கொவிட்-19 நோய்த் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட சுகாதார சேவைப் பணியாளர்களை கௌரவப்படுத்தும் வகையில் சினமன் ஹோட்டல் இலவச விடுமுறைப் பொதியொன்றை வழங்கியுள்ளது.

சினமன் சுவவிரு பிரணாம எனப் பெயரிடப்பட்டுள்ள இப்பொதி ஜோண் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவர் நிஷாத் பாலேந்திரவினால் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

கொவிட் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளித்த வைத்தியசாலை பணிக்குழாமினருக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் சுகாதார அமைச்சின் தெரிவின்படி 1000 பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் வைத்திய நிபுணர் சஞ்சீவ முனசிங்க, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: - செவ் 3 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்தக் கடை நடத்துகின்றார்.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10814

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 31 செவ் 1 இல்
உயரம்: 6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்தமாக வாகனதிருத்தகம் வைத்திருக்கின்றார்.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10815

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 59 செவ் 2 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HND IT, Diploma in English. வங்கி ஊழியர்.
எதிர்பார்ப்பு: அரச வேலை. யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி, தீவகம் தவிர்ந்த ஏனைய இடங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: B/10816

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 2
கி.பா: 23 1/4 செவ் 7 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: M.B.B.S. வைத்தியர்.
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், விரிவுரையாளர்.
தொ.இ: B/10817

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 58 செவ் 8 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Sc, Demo.
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம். யாழ் மாவட்டம் மட்டும் ஏற்கப்படும். ஆசிரியர், தீவுப் பகுதியில் வசிப்போர் வேண்டாம்.
தொ.இ: G/10822

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: செவ் 11 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. London Nationality,
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் மணமகள் விவாகரத்துப் பெற்றவர். பிள்ளைகள் இல்லை.
தொ.இ: G/10824

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 3 1/4 செவ் 10 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச தொழில் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு.
தொ.இ: G/10826

பிறப்பு: 1994 இந்துநட்சத்திரம்: ரோகினி 4கி.பா: செவ் 3 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Sc, Medical Laboratory Science (Final year).
எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: G/10827

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மாணவர்களுக்கான அறிவித்தல்

பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பிப்பதற்கு முன்னாயத்தமாக தொற்று நீக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் பல்கலைக்கழக விடுதிகளில் தங்குமிடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 21.06.2020 க்கு முன்பாக விடுதிகளில் இருந்து தங்கள் உடைமைகளை எடுத்துச் செல்லுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மாணவர்கள் தங்கள் விடுதிக்குரிய உப காப்பாளரைத் தொடர்பு கொண்டு உடைமைகளை எடுப்பதற்கான நேரம் மற்றும் திகதிகளை ஒதுக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறித்த காலப்பகுதியினுள் தங்கள் உடைமைகளை ஏதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் எடுத்துச் செல்ல முடியாத மாணவர்கள் முற்கூட்டியே தங்கள் விடுதிக்குரிய உப காப்பாளரைத் தொடர்பு கொண்டு அறிவித்தல் வேண்டும்.

பதிவாளர்

(ஜ-972)

# கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

## ஏலவிற்பனை- 2020

**கரைச்சிப் பிரதேச சபையால் பின்வரும் பொருட்கள் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.**

**காலம்:- 2020 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆம் திகதி (25/06/2020)**
**இடம்:- கரைச்சிப்பிரதேச சபை வளாகம்**
**நேரம்:-மு.ப. 10.00 மணி - பி.ப. 3.00 மணி வரை**

- 25/06/2020 ஆம் திகதி மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப.12.00 மணிவரையும் ஏலவிற்பனைக்குரிய பொருட்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும்.
- ஏலவிற்பனையில் தீர்மானிக்கப்படும் பொருட்களின் பெறுமதியினைக் காசாக உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.
- ஏலவிற்பனையில் பங்குபற்றுவோர் ஏலவிற்பனை நடைபெறும் இடத்தில் பதிவுகளை மேற்கொண்ட பின்னரே ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
- ஏலவிற்பனையில் பெற்றுக்கொண்ட பொருட்களை அன்றைய தினமே (25/06/2020) பி.ப.4.00 மணிக்கு முன்னராக பிரதேச சபை வளாகத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லுதல் வேண்டும். அத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் எம்மால் எக்காரணம் கொண்டும் மீளப் பெறப்படமாட்டாது.
- இவ் ஏலவிற்பனையில் பங்குபற்றுவோர் ஏலவிற்பனைக் குழுவின் தலைவரால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படல் வேண்டும்.
- கரைச்சி பிரதேச சபையினுடைய கௌரவ உறுப்பினர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் இவ் ஏலத்தில் (கேள்வி நடவடிக்கைகளில்) பங்கேற்பது விரும்பத்தக்கதல்ல.

அருணாசலம் வேழமாலிகிதன்,
தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

(ஜ-9716)



# தமிழ் மக்கள் உங்களை நம்பியதற்கு நீங்கள் அவர்களுக்கு செய்தது என்ன?

## கூட்டமைப்பிடம் சுரேஷ் கேள்வி

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் எவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய முயற்சிகளால் விடுவிக்கப்படவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஓரிரு நாட்களுக்கு முன்பாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோர் ஒரு சில விடயங்களை கூறி இருக்கின்றார்கள்.

முக்கியமாக மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மிக அதிகபட்சமான ஆசனங்களுடன் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்றும் மாற்று அணியோ மாற்றுத் தலைமையோ தேவையற்ற விடயங்கள் என்றும் கூறியுள்ளனர்.

இந்த நாட்டில் ஒரு இராணுவ ஆட்சி வர இருக்கிறது . ஐக்கிய தேசியக் கட்சி பிளவடைந்து போயுள்ளது. ஆகவே நாங்கள் ஒரு பலமான சக்தியாக வருவதன் மூலம் சில சமயம் மீண்டும் ஒருமுறை நாங்கள் எதிர் கட்சித் தலைமையை பெற்றுக் கொள்ள வாய்ப்பாக இருக்கும். அவ்வாறு பெற்றுக் கொள்வதன் ஊடாக பல விடயங்களை சாதிக்க முடியும் என்ற தோரணையில் சில கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்.

அதனடிப்படையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பாக சில கருத்துகளை நாங்கள் தெரிவிக்க விரும்புகின்றோம்.

முதலாவதாக கடந்த நான்கர்ரை வருடங்களாக அல்லது யுத்தத்திற்கு பிற்பாடு தமிழ் மக்கள் ஒரு ஐக்கியத்தின்மேல் நம்பிக்கை கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல விடயங்களை சாதிக்கும் என நம்பி அவர்களை நாடாளுமன்றம் அனுப்பி இருந்தார்கள்.

ஆனால் கடந்த நான்கரை வருட காலத்தில் இவர்கள் கூறியது போன்று அல்லது இவர்கள் மக்களுக்குக் கொடுத்த ஆணை அல்லது நம்பிக்கை அதன் அடிப்படையில் அவர்கள் ஏதாவது விடயங்களை சாதித்திருக்கிறார்களா? என்று ஒரு கேள்வி நிச்சயமாக இருக்கிறது.

காணி விடுவிப்பாக இருக்கலாம், அரசியல் கைதிகள் விடுவிப்பாக இருக்கலாம், காணாமலாக்கப்பட்டோர் விவகாரங்களாக இருக்கலாம், ஒரு புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டு வருவதாகக்கூட இருக்கலாம். இவை எதிலும் அவர்கள் வெற்றி பெறவில்லை என்பது தான் உண்மை.

அரசியல் கைதிகள் எவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய முயற்சிகளின் ஊடாக விடுதலையாகவில்லை.

பலபேர் விடுவிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இவர்கள் ஒன்றில் பிணையில் வெளிவந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு தண்டனை கிடைத்திருக்கிறது. அல்லது அவர்களின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு விடயம் தான் நடந்து முடிந்துள்ளது. இப்போதும் 91 அரசியல் கைதிகளுக்கு மேல் வழக்குகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் சில அரசியல் கைதிகளை விடுவித்து விட்டோம் என்பது ஒரு அப்பட்டமான பொய் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## தேர்தல் வியூகம்

# பொங்கலுக்கு வரும் தீபாவளிக்கு வரும் என்றனர் ஆனால் எதுவும் வரவில்லை

## அங்கஜன் சாடல்

(சாவகச்சேரி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் இருப்பைக் காக்கின்றனரோ இல்லையோ தங்களின் இருப்பைப் பாதுகாக்கின்றனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர் ஒருவர் "கூட்டமைப்பின் பேச்சாளர் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்"அது தொடர்பாக உங்கள் கருத்து என்னவென கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,



தேர்தலுக்காக அனைவரும் வாயில் வரும் பொய்களை எல்லாம் சொல்லும் நேரமிது. தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக அக்கறை இருப்பவர்கள் இந்த அரசாங்கம் வந்தவுடனேயே அது தொடர்பாக பேசியிருக்க வேண்டும். அக்கறை இருந்திருந்தால் இந்த அரசாங்கம் வர இடைஞ்சலாகவும் இருந்திருக்கக்கூடாது. அல்லது தாங்கள் ஆட்சியில் இருந்த நான்கரை வருடங்களுக்குள் இதனைச் செய்திருக்க வேண்டும்.

இவர்களாலேயே ஒருசில முன்னாள் போராளிகள் அரசியல் கைதிகளாக ஆக்கப்பட்டு இதுவரை சிறைகளில் அடைபட்டுள்ளனர்.

அவர்களின் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படும் நிலை காணப்படுகிறது. தேர்தலுக்காக பொய்ப்பிரசாரங்களை செய்வதனை விடுத்து மக்களுக்கு என்ன தேவை என்பதனைப் பார்க்க வேண்டும்.

உரிமையையும் அபிவிருத்தியையும் கடந்த அரசாங்கத்துடன் இணைந்து செய்து தருவதாகக் கூறி இந்த நான்கரை வருடங்கள் என்ன செய்தார்கள். தீர்வு பொங்கலுக்கு வரும், தீபாவளிக்கு வரும் என்று எதுவுமே எமக்கு வரவில்லை. இந்த அரசாங்கத்திலும் வந்து என்ன செய்யப்போகிறார்கள்? அவர்கள் தங்களின் ஆசனங்களைப் பாதுகாப்பதற்காக எதுவும் செய்யத் தயாராக இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-30)

# சலுகைகளை எதிர்பாராமல் மக்களுக்கு சேவை செய்வேன்

## அடித்துக் கூறுகிறார் மணிவண்ணன்

(குப்பிழான்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் ஆணையின் மூலம் நான் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானால் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய எந்தவொரு சலுகைகளையும் பெற்றுக்கொள்ள மாட்டேன். இதனையொரு உத்தரவாதமாக தமிழ் மக்களுக்கு கூறுகிறேன் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற வேட்பாளரும், கட்சியின் சட்ட ஆலோசகருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.



கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றம் சென்று சலுகைகளை, சுக போகங்களை அனுபவிப்பதுதான் எங்கள் நோக்கமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து சென்று அந்த வேலையைச் செய்திருக்க முடியும்.

நாங்கள் சலுகைகளுக்காக, சுகபோகங்களுக்காக, பதவிகளுக்காக எங்களது கொள்கைகளை விட்டுக் கொடுப்பவர்கள் அல்ல.

எனக்கு வரிச்சலுகை இன்றி வாகனம் வழங்கப்படுமாக இருந்தால் அதனைப் பெற்று ஏதோவொரு விதத்தில் பணமாக மாற்றி முழுமையாக மக்களுக்கு கொடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-18)

# தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கே அரசுக்கு ஆதரவு

## சுமந்திரன் விளக்கம்

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாக சொல்கிறார்கள். அது அப்படியல்ல. அரசியலமைப்பை உருவாக்கி தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கான ஆதரவே அது என்று முன்னாள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களிற்கிடையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குகொண்டபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் மோசமான ஊடுருவல் நடவடிக்கைக்கு உள்ளாகி வருகின்றன.

அரசுகள் மாறினாலும் அந்த செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்றுகொண்டுதான் இருக்கின்றன. இப்படியான சவால் நிறைந்த காலத்தில்தான் நாம் ஒரு தேர்தலை சந்திக்கின்றோம்.

கூட்டமைப்பு ஒன்றுமே செய்யவில்லை என்பது அப்பட்டமான பொய் பலவிடயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால் எதுவும் செய்து முடிக்கப்படாமல் ஒரு தொய்வு ஏற்பட்டுள்ளதென்பதே உண்மை.

தற்போதைய ஆட்சியில் இருப்பவர்கள் என்ன மனோ நிலையில் இருந்தாலும் அவர்களிடமும் தீர்வுபற்றிப் பேசியிருக்கின்றோம்.

புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

எனவே அதில் எமது அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டால் நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம்.

அது அரசாங்கத்திற்கான ஆதரவாக பலர் சொல்கிறார்கள். அது அப்படியல்ல அரசியலமைப்பை உருவாக்கி தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கான ஆதரவே அது என சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

(ஜ-4-5-299)

# நண்பனை நம்பினேன் நான் சிக்கலில் மாட்டினேன்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வைத்தியர் சாட்சியம்

(கொழும்பு)

**முதலாம் வகுப்பு முதல் உயர்தரம் வரை ஒன்றாக கற்ற நண்பனால் தனக்குப் பிரச்சினை ஏற்படும் என ஒருபோதும் நம்பவில்லை எனவும் தற்போது அந்த நண்பனை நம்பியதால் தான் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உடற்கூற்று வைத்திய நிபுணர் ஒருவர் நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.**

குண்டுப் பரிசோதனையின் போது காயமடைந்திருக்கலாம் என நம்பப்படும் சஹ்ரானின் சகோதரர் ரில்வானுக்கு (சாய்ந்தமருதில் தற்கொலை செய்த குழுவுக்கு தலைமை வகித்தவர்), சிகிச்சையளிக்க உதவியதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் குறித்த சம்பவம் இடம்பெற்றது. கடந்த 2018 ஓகஸ்ட் மாதமாகும். அப்போது, தனக்கு சஹ்ரான் யார் என்றே தெரியாது எனவும் ரில்வானையும் தெரியாது எனவும் சாட்சியமளித்த அவர், தனது நண்பனான மொஹம்மது அலியார் மன்சூர் ரிலா தனக்கு மிக நெருக்கமான ஒருவருக்கு எரிவாயு சிலிண்டர் வெடித்து காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி முதலுதவி தொடர்பில் ஆலோசனை கோரியதாலேயே அது தொடர்பில் தான் செயற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போதும் தான் கடமையாற்றுவதால், ஊடகங்களுக்கு தனது சாட்சியை வழங்க வேண்டாம் என அவர் கோரியதனால் ஆணைக்குழு அவரது பெயரை வெளியிடாமல் சாட்சியத்தை வெளிப்படுத்த ஊடகங்களுக்கு அனுமதியளித்தது.

"நான் மருதமுனையைச் சேர்ந்தவன். அல் மனார் மத்திய கல்லூரியில் கல்வி கற்றேன். பின்னர் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகினேன். எவ்வாறாயினும் அப்போதைய நாட்டின் சூழலை கருத்தில் கொண்டு கொழும்பு பல்கலைக் கழகத்திலேயே கல்வி கற்றேன்.

எனது நண்பர் ஒருவர் உள்ளார். அவரது பெயர் ரிலா. முழுப் பெயர் மொஹம்மட் அலியார் மன்சூர் ரிலா. முதலாம் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்தோம். உயர்தரத்தில் அவர் கணிதம் கற்றார். நான் உயிரியல் கற்றேன். அவர் பேராதனை பல்கலைக்குத் தெரிவாகி பொறியியலாளரானார்.

அவர் சவுதி அரேபியாவில் பணியாற்றிய நிலையில் தான், 2018 ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி அதிகாலை 1.38 இற்கு எனக்கு ஒரு அழைப்பு வந்தது.

ரிலாவே பேசினார். சாதரணமாக நான் வைத்தியர் என்பதால், ரிலா வைத்திய ஆலோசனைகளை என்னிடம் பெற்றுக்கொள்வார். அந்த வகையில் அன்றும் தனக்கு வேண்டப்பட்ட ஒருவருக்கு எரிவாயு சிலிண்டர் வெடித்து காயம் ஏற்பட்டுள்ளதாகவும் என்ன முதலுதவி செய்யலாம் எனவும் கோரினார்.

அப்போது நான் முதலில் காயங்கள் குறித்த புகைப்படங்களை அனுப்புமாறு அவருக்கு தெரிவித்தேன்.

பின்னர் உள்ளூர் இலக்கம் ஒன்றிலிருந்து வட்ஸ் அப் ஊடாக புகைப்படங்கள் வந்தன. அவற்றை பார்த்தேன். எரிகாயங்கள் இருந்தன. முகம், கைகளில் அவை இருந்தன. ஒரு கையில் விரல்கள் கழன்று இருந்தன. நோயாளர் கண்களை மூடிக் கொண்டிருந்தார். அதனை பார்த்ததும் நோயாளரின் உயிருக்கு ஆபத்து எனத் தெரிந்தது.

பின்னர் எனது நண்பர் ரிலா மீள அழைத்தார். அப்போது நான் அவருக்கு விடயத்தை கூறினேன். நிலைமை ஆபத்தானது போன்று உள்ளது, எனவே உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள் என அவருக்கு நான் கூறினேன்.

பின்னர் அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்து வந்துகொண்டிருப்பதாக 2018 ஓகஸ்ட் 27 முற்பகல் வேளையில் தன்னை ரிலாவின் நெருக்கமானவர் என அறிமுகப்படுத்திக் கொண்ட மொஹமட் என பெயரைக் கூறிய ஒருவர் தொலைபேசியில் கூறினார்.

இந்நிலையிலேயே நான் நோயாளர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் 79 ஆம் சிகிச்சையறையிலும் இருந்த போது சென்று விசாரித்தேன். பின்னர் 2018 டிசெம்பர் மாதம் அளவில் ரிலா, எனது வீட்டுக்கு வந்தார். சவுதியில் இருந்து வந்துவிட்டதாக தொலைபேசியில் கூறியே அவர் என்னை சந்திக்க வந்தார். அவருடன் மேலும் மூவர் இருந்தனர். ஒருவரை சஹ்ரான் மௌலவி என அறிமுகம் செய்தார். அவரது சகோதரருக்கே எரிவாயு சிலிண்டர் வெடித்து காயம் ஏற்பட்டதாகவும் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார். அப்போது அவரது சகோதரரின் தற்போதைய நிலைமை குறித்தும் நான் விசாரித்தேன்.



அதுதான் சஹ்ரானை முதலும் கடைசியுமாக சந்தித்தது. கடந்த 2020 ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னரேயே சஹ்ரான், சிகிச்சைக்கு வந்த ரில்வான் உள்ளிட்டோரின் உண்மை முகத்தை ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். எனது நண்பனால் இன்று நான் சிக்கலை சந்தித்துள்ளேன். அதனாலேயே இன்று இவ்வாணைக் குழுவில் சாட்சியம் அளித்துக்கொண்டிருக்கின்றேன் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதால் 50 வீதமான உள்ளூராட்சி மன்றங்கள் நிதி நெருக்கடிகளை சந்தித்துள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் 347 உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன. குறித்த உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிகள் தொடர்பிலான அறிக்கையை துரிதமாக சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டதாகவும் இந்த அறிக்கைகள் கிடைக்கப் பெற்றவுடன் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# கைரேகையுடன் கூடிய தேசிய அடையாள அட்டைகள் தயாரிக்கத் தீர்மானம்

கொழும்பு)


கைரேகைகளுடன் கூடிய தேசிய அடையாள அட்டைகளைத் தயாரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அடுத்த ஆண்டு 15 வயதைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் அடையாள அட்டையை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஜெனரல் வியானி குணதிலக தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் புதிய தேசிய அடையாள அட்டை தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கமைய அடுத்த ஆண்டு 15 வயதைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதுடன் கைரேகையுடன் கூடிய புதிய அடையாள அட்டைகள் மோசடிகளைக் குறைப்பதற்கு பயன்படும் என்றும் கொரோனாத் தாக்கம் காரணமாக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ஒரு நாள் சேவை எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# இளைஞன் கடத்தல் விவகாரம்; ஹிருணிக்காவிற்கு நீதிமன்று அழைப்பு



(கொழும்பு)

இளைஞன் ஒருவனை கடத்தி சிறை வைத்திருந்த சம்பவம் தொடர்பாக ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அழைப்பாணை விடுத்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஹிருணிக்காவுக்கு சொந்தமானதாகக் கூறப்படும் வாகனம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாகவே ஜூலை மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன உத்தரவிட்டுள்ளார். (ஜ-8)

# ஊரடங்கை மீறிய 56 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கை மீறிய 56 பேர் நேற்று முன்தினம் இரவு 12 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் கைது செய்யப்பட்டனர். இதன்போது இவர்கள் பயணித்த 24 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரையான காலப் பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறிய 71 ஆயிரத்து 828 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் பயணித்த 20 ஆயிரத்து 488 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ஆசிரியரின் செயலுக்கு அதிகாரிகள் பாராட்டு

(முகமாலை)

மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு ஏனைய ஆசிரியர்களுக்கு முன்னுதாரணமாகச் செயற்பட்ட முகமாலை ஆசிரியைக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தரம் 5 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். சரஸ்வதி சண்முகதாஸ் என்ற ஆசிரியை இவர்களின் வகுப்பாசிரியராக கடமையாற்றுகிறார்.

கொரோனா இடர் காலகட்டம் என்பதால் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளில் பல மாற்றங்களை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் குறித்த மாணவர்களுக்கான செயலட்டைகள் கடந்த 2 ஆம் திகதி பளை வலயத்தால் வழங்கப்பட்டன.

குறித்த பாடசாலை அதிபர் சென்று அதை பெற்றுக் கொள்ளாத நிலையிலும் குறித்த ஆசிரியை தானாகச் சென்று அந்த செயலட்டைகளைப் பெற்று மாணவர்களுக்கு வழங்கியதுடன் குறித்த மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்தியுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியதுடன் ஆசிரியர் தானாகவே 11 ஆம் திகதி பளை கோட்டத்திற்கு சென்று மாணவர்களின் வினாத்தாள்களை திருத்தி மாணவர்களின் பெறுபேறுகளை கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவரின் முயற்சியை மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் பாராட்டியுள்ளதுடன் இவர் ஏனைய ஆசிரியர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றார் எனவும் தெரிவித்துள்ளனர். (4-5-9)

# முல்லைத்தீவில் கொய்யா அறுவடை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்டுவான் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பழம்பாசி கிராமத்தில் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக 2 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்பட்ட கொய்யா செய்கையின் அறு வடை விழாவானது கடந்த திங்கட்கிழமை அன்று விவசாயப் போதனாசிரியர் சி.சுரேன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தனர். முல்லைத்தீவில் கொய்யா செய்கையில் பாரிய பிரச்சினையாக உள்ள நெமற்றோட்டு தாக்கத்தினை ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறை மூலம் கட்டுப்படுத்தி பயிர்ச்செய்கையினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார்.

மேலும் இவ் விவசாயி இலங்கை சிறந்த விவசாய நடைமுறைகளிற்கான சான்றுப்படுத்திலினையும் இக் கொய்யா செய்கைக்காக பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (4-5-31)



கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் "பச்சை பசும் கிளிநொச்சி" என்னும் தொனிப்பொருளில் பரந்தன் முல்லை வீதியில் நேற்று மர நடுகை செயற்றிட்டம் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் தலைவர் அ.பங்கையச்செல்வன் தலைமை யில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளி நொச்சி பிராந்திய நீர்ப்பாசன பிரதிப்பணிப்பாளர் த.இராஜகோபு மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்-முரசு மோட்டை செய்தியாளர்)

# இராணுவத்தினருடையது என சந்தேகிக்கும் பொருட்கள் புலோப்பளையில் மீட்பு



(முறிகண்டி)

பளையில் இராணுவத்தினுடையது என சந்தேகிக்கப்படும் அடையாள அட்டை உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புலோப்பளை காற்றாலை அமைந்துள்ள பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட காணி நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்ட போது கிடைத்த சில பொருட்கள் மற்றும் கைக் குண்டுகள் தொடர்பில் பளை பொலிஸாருக்கு காணி உரிமையாளர் தகவல் வழங்கினார்.

இக் காணியிலிருந்து தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இராணுவத்தால் விடுமுறைக்கு செல்வதற்காக வழங்கப்படும் அனுமதி சிட்டை, இராணுவத்தினர் தண்ணீர் கொண்டு செல்லும் போத்தல், நெஞ்சு கவசம் மற்றும் 3 கைக் குண்டுகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டன.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் நீதிமன்றில் அனுமதி பெற்று குறித்த பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-5-100-312)

# இறைச்சிக்காக வெட்டப்பட்ட பசு; ஐந்து பேர் பொலிஸாரால் கைது

(மன்னார்)

மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவில் உள்ள முள்ளிக்கண்டல் பகுதியில் மக்களின் வாழ்வாதாரத்திற்கு என வழங்கப்பட்ட நிறை மாத பசு ஒன்று திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டு பங்கிடப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை அடம்பன் பொலிஸார் ஐந்து பேரை கைது செய்தனர்.

அடம்பன் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் திருடப்பட்ட நிறை மாத பசுவை இறைச்சிக்காக வெட்டி பங்கிட்ட நிலையில் குறித்த நபர்களை கைது செய்தனர்.

அண்மைக்காலமாக பசுக்கள் தொடர்ச்சியாக திருடப்பட்டு வந்த நிலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை அடம்பன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் மினுக்கன் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக் கண்டல் பகுதியில் நிறை மாத பசு ஒன்று இறைச்சிக்காக வெட்டப்பட்டு கொண்டிருந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புபட்ட 5 நபர்கள் சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் எந்த ஒரு அனுமதியும் பெறாமல் குறித்த பசு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்(2-4-285)

# நாகதம்பிரான் பொங்கல் 80 பேருக்கு அனுமதி


(நெளுக்குளம்)

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவில் 80 பேர் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஆலய நிர்வாகத்தினரால் குறிப்பிடப்படும் 80 பேருக்கு மாத்திரம் ஆலயத்தினுள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர்களுக்கு விசேட அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (4-5-299)

# எதிர்வரும் 21 ஆம் திகதி சூரிய கிரகணம்



(நெளுக்குளம்)

இந்த வருடத்தின் சூரிய கிரகணமானது எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.22 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரையான காலப்பகுதியில் சூரிய கிரகணத்தினை அவதானிக்க முடியும்.

சூரிய கிரகணத்தினை நாம் வெற்றுக் கண்ணினால் பார்க்கக்கூடாது. சூரிய கிரகணத்தைப் பார்வையிடும் பிரத்தியேகக் கண்ணாடி கொண்டு பார்க்க முடியும்.

இந்தக்காலப்பகுதிகளில் கர்ப்பிணிப் பெண்கள் வெளியில் திரிவதையோ அல்லது கிரகண காலத்தில் சூரியனை பார்ப்பதனையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கிரகண காலத்தில் சூரியனிலிருந்து வெளியேறுகின்ற புறவூதாக்கதிர்களின் தாக்கம் அவர்களை இலகுவில் தாக்கும் தன்மை கொண்டவை. அதனாலேதான் கர்ப்பமாக இருக்கும் பெண்கள் வெளியில் வரக்கூடாது எனக்கூறப்படுகிறது.

இந்தக்காலப்பகுதிகளில் உணவுகள் சமைப்பதனையோ உணவுகளை உட்கொள்வதனையோ தவிர்த்தல் மற்றும் சமைத்த உணவுகள் இருந்தால் அவற்றை தர்ப்பை புல் கொண்டு மூடிவைத்தல் வேண்டும். கிரகண காலம் முடிந்ததும் அவற்றை எடுத்து விட்டு உணவுகளை உட்கொள்ளலாம். அல்லது கிரகண காலம் முடிந்ததும் சமைத்து உண்பது சிறந்தது என சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ. ஜெ.மயூரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (5-299)

# நீதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்

(நுவரெலியா)

**நீதியான முறையில் தேர்தலை நடத்துவதற்காக அனைத்துத் தரப்பினரும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு தமது முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வே.இராதா கிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்தார்.**



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தலுக்கான மக்கள் சந்திப்பு அட்டனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸ் தாக்கத்தால் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன்படி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு பிரசாரத்தை முன்னெடுப்பது என்பது தொடர்பில் கட்சிச் செயற்பாட்டாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

பாரிய கூட்டங்களை இம்முறை நடத்த முடியாது. வீடுகளுக்கு சென்றே பரப்புரை செய்ய வேண்டும். அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் தேர்தல் நியாயமாக நடைபெறுவதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்கவேண்டும் அதேபோல்அனைவரும் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# இரண்டு ஏக்கருக்கும் அதிகமான கஞ்சா சேனைகள் சுற்றிவளைப்பு



(மொனராகலை)

ட்ரோன் கமரா மூலம் அடர்ந்த காட்டிற்குள் இரு கஞ்சா சேனைகள் சுற்றிவளைக்கப்பட்டதுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் அதிகாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில அடர்ந்த காட்டுப் பகுதிகளான மலகாறுவ மற்றும் அமேகமுவ என்ற இடங்களில் இருக்கும் இரு கஞ்சா சேனைகளே சுற்றி வளைக்கப்பட்டன.

குறித்த சுற்றிவளைப்பில் மொனராகலை, அம்பாறை, பண்டாரவளை மதுவரித் திணைக்களத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 20 பேர் கொண்ட குழுவினர் ஈடுபட்டனர்.

இதன் போது குறித்த பாரிய அளவிலான கஞ்சா சேனை ட்ரோன் கமரா உதவியுடன் கண்காணிப்பு செய்யப்பட்டு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுமார் 2 ஏக்கருக்கு அதிகமான ஐந்து கஞ்சா சேனைகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சேவையை விட்டுச் சென்ற பொலிஸாரை மீள இணைத்துக் கொள்ள நடவடிக்கை

(கொழும்பு)

சேவையை விட்டு விலகிச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்கவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவோர் ஒருமாத மீள் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவதுடன், பொலிஸ்மா அதிபரால் பரிந்துரைக்கப்படும் பிரதேசத்தில் 3 வருடம் கட்டாய சேவையில் ஈடுபடுவது அவசியமாகும்.

இதேவேளை தற்போது சேவையை விட்டுச் சென்றுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஜுலை 17 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்ப முடியும்.

இதன்படி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 'மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளல் -2020' என குறிப்பிட்டு, மேலதிக செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவு, 14 ஆவது மாடி, சுஹுறுப்பாய, பத்தரமுல்லை, எனும் தபால் முகவரிக்கு அனுப்பலாம் என்றும் **defence.lk** அல்லது **police.lk** எனும் இணையத்தளத்தின் மூலம் அல்லது 011 288 7884 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# இந்தியாவிலிருந்து 53 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா தொற்று காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் இந்தியாவின் தமிழ்நாட்டில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த 53 இலங்கைப் பிரஜைகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய, ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்றின் ஊடாக, அவர்கள் நேற்று அதிகாலை 4.30 அளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வருகை தந்தவர்களில் 51 முதியவர்கள் மற்றும் 2 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி, அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பரிசோதனைப் பெறுபேறுகள் கிடைக்கும் வரை விமான நிலையத்திற்கு அருகிலுள்ள விடுதியொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சர்வதேச கப்பல் நிறுவனத்தில் சேவை புரியும் 30 இந்திய பிரஜைகள் விசேட விமானமொன்றின் மூலம் நேற்று முன்தினம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)



# பாரதம்

# இந்திய - சீன எல்லையில் பதற்றம்
## இரு நாடுகளுக்கிடையே போர் மூளும் அபாயம்
### பதற்றத்தை தணிக்குமாறு ஐ.நா.வேண்டுகோள்

(ஜெனிவா)


இந்தியா- சீனா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில் இரு நாடுகளும் அதிகபட்ச கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியா-சீன எல்லையில் பதற்றத்தைத் தணிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில், லடாக் எல்லையின் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு தரப்பு படைகளுக்கும் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் இந்திய தரப்பில் இதுவரை 20 வீரர்கள் வீரமரணம் அடைந்துள்ளதாக இந்திய இராணுவம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

சீனா தரப்பில் உயிரிழப்புகள் மற்றும் காயமடைந்த வீரர்களின் மொத்த எண்ணிக்கை 43 என எ.என்.ஐ. நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த மோதலால் இந்தியா-சீனா இடையே போர் மூளும் சூழல் நிலவி வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் தெரிவிக்கையில், இந்தியா-சீன எல்லையில் நடைபெற்ற வன்முறை மற்றும் உயிரிழப்புகள் மிகுந்த கவலை அளிக்கிறது. இரு நாடுகளும் அதிகபட்ச கட்டுப்பாடுடன் செயற்பட வேண்டும் என இரு



நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2)

# இந்தியாவில் எகிறும் கொரோனா ஒருநாளில் மட்டும் 2000 பேர் பலி!

(டில்லி)

இந்தியாவில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்த வண்ணம் உள்ளது. அந்த வகையில் இதுவரை இல்லாத அளவாக கொரோனாத் தொற்றால் இந்தியாவில் ஒரே நாளில் 2003 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்தியாவில் முதல் முறையாக ஒரே நாளில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரே நாளில் மேலும் 10,974 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 54 ஆயிரத்து 65 ஆக உயர்வடைந்துள்ளது. (2)

# கொரிய ...
# தகவ...
## குண்டு வை...



கொரிய தீபகற்பத்தில் வடகொரியா மற்றும் தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே நிலவிவரும் முரண்பாடுகளை களைய உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. ஆனாலும், இந்தப் பிரச்சினைக்கு வெகு ஆண்டுகளாக தீர்வு



அமெரிக்காவின் ஹொக் கசின் டெலாவேர் பகுதியில் ஆஞ்சநேயருக்கு 25 அடி உயர சிலை நிறுவப் பட்டுள்ளது.

# மீண்டும் சீனாவில் கொரோனா அபாயம்
## பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானம்

(பீஜிங்)

கொரோனா வைரஸ் பரவும் அபாயம் காரணமாக பீஜிங்கிலுள்ள பாடசாலைகளை மூடுவதற்கு சீனா தீர்மானித்துள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்தல் மற்றும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பாக நேற்று விசேட பேச்சு வார்த்தையொன்று இடம்பெறவுள்ளதாக சீன அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்தோடு பல்கலைக்கழக கற்பித்தல் செயற்பாடுகளையும் தற்காலிகமாக இடை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஒன்லைன் முறையின் ஊடாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வது தொடர்பாகவும் ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டதையடுத்து வணிக வளாகங்கள் உட்பட வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட் டுள்ளதாகவும் சீனா தெரிவித்துள்ளது. (2)

# ஜப்பானின் மிகப் பெரிய கப்பலில் தீப்பரவல்


(டோக்கியோ)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவிற்கு அருகிலுள்ள துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட பயணிகள் கப்பல் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கப்பலில் பணிபுரிந்தவர்கள், தீயணைப்பு மற்றும் கடற்படை வீரர்கள் ஆகியோரின் பல மணிநேர போராட்டத்தின் பின் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்பதோடு தீ விபத்தில் பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் மிகப்பெரிய கப்பல்களில் ஒன்றான அசுகா II என்ற கப்பலின் மேல்



தளத்திலுள்ள ஒரு களஞ்சியசாலையில் தீபற்றத் தொடங்கியது. இதன்போது கப்பலில் அத்தியாவசிய பணிக்காக 153 பணியாளர்கள் இருந்துள்ளதோடு, அவர்களும் தீயை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு பல மணி நேர போராட்டத்தின்பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (2)

## வெளிநாடு



# ய நாடுகளிடையே உறவை வளர்த்த
# வல் தொழில்நுட்ப கட்டடம்
## வைத்து தகர்த்து உறவை முறித்த வடகொரியா



(சியோல்)

**வட கொரியாவில் செயற்பட்டு வந்த கொரிய தகவல் தொடர்பு அலுவலகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.**

காணாமல் உள்ளது.

இதற்கிடையில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரி யோஜோங் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்ள தொடங்கியுள்ளார். இவரின் ஆட்சி நடைமுறை குறித்து இதுவரை யாருக்கும் எந்த விபரமும் தெரியவில்லை.

தனது அண்ணனை விட மிகவும் ஆக்ரோஷமான முடிவுகளையே இவர் எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

தென்கொரிய எல்லையில் இருந்து வடகொரிய ஆட்சிக்கு எதிரான எழுத்துக்களுடன் பலூன்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக பறக்கவிடப்பட்டன.

உள்நாட்டிலேயே வடகொரியாவுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகின.

இத்னால் ஆத்திரமடைந்த வடகொரியா தென்கொரியாவுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்தது.

இதற்கிடையில், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை மேம்படுத்த 2018 ஆம் ஆண்டு வடகொரியாவின் ஹேசாங் நகரில் கொரிய தகவல் தொடர்பு கட்டடம் ஒன்று திறக்கப்பட்டது. இந்த கட்டடம் தென்கொரியாவின் செலவில் கட்டப்பட்டது.

அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததில் இருந்தே இந்தக் கட்டடம் செயற்படாமல் இருந்தது.


இந்த கட்டடம் இதற்கு முன்னதாக வட மற்றும் தென் கொரிய நாட்டினர் இரு நாட்டு உறவை மேம்படுத்த முக்கிய பங்காற்றியது.

தற்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக முற்றிலும் மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இரு நாட்டு உறவையும் வலுப்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்ட அந்த கட்டடத்தை வடகொரியா குண்டு வைத்து தகர்த்துள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் வடகொரியா தனது எதிரி நாடாக கருதும் தென்கொரியாவை எச்சரித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும், இந்தச் சம்பவம் இரு நாட்டுக்கும் இடையே மீண்டும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. (2)

## அமெரிக்க முன்னாள் கடற்படைக்கு 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை



(மொஸ்கோ)

ரஷ்யாவில் அமெரிக்காவுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அமெரிக்க முன்னாள் கடற்படை அதிகாரிக்கு 16 ஆண்டுகள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்தவர் பால் வீலன் (வயது 50). அமெரிக்க கடற்படையின் முன்னாள் அதிகாரியான இவர் தனது நண்பரின் திருமணத்திற்காக கடந்த 2008ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ரஷ்யா சென்றார்.

அவர் தலைநகர் மொஸ்கோவில் **உள்ள ஒரு ஹோட்டலில் தங்கி யிருந்த போது பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.**

அவர் ரஷ்யாவில் அமெரிக்காவுக்கு உளவுபார்த்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் பால்வீலன் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்ததோடு தான் நிரபராதி என்றும் தெரிவித்தார்.


பால்வீலன் மீதான வழக்கு மொஸ்கோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கின் இறுதி விசாரணை முடிந்தது. இதில் பால்வீலன் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபிக்கப்பட்டதாக கூறி நீதி மன்றம் அவரைக் குற்றவாளியாக அறிவித்தது.** (2)

## உலகை உலுக்கும் கொரோனா

# இறப்பு வீதத்தை குறைக்கும் மருந்து
## ஒக்ஸ்போட் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிப்பு

(லண்டன்)

கொரோனாவால் ஏற்படும் இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையிலான மருந்தை இங்கிலாந்து ஒக்ஸ்போட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



உலகையே உலுக்கி வரும் கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் பல்வேறு மருத்துவ விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கொரோனாவால் ஏற்படும் இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையிலான மருந்தை இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

டெக்சாமெத்தசோன் எனப்படும் இந்த மருந்தை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எடுத்துக்கொண்டால் அவர்களது இறப்பு விகிதம் குறைகிறது.

பரிசோதனை முயற்சியாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட சுமார் 6 ஆயிரம் பேரில் 2 ஆயிரம் **பேருக்கு டெக்சாமெத்தசோன் மருந்து கொடுக்கப்பட்டது. இந்த மருந்தை எடுத்துக்கொண்ட வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் வெண்டிலேட்டர்** உதவியுடன் சிகிச்சை பெறுபவர்களில் உயிரிழப்பு வாய்ப்பு 40 சதவிகிதத்தில் இருந்து 28 சத விகிதமாக குறைந்துள்ளது.

ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சை பெறுபவர்களில் உயிரிழப்பு வாய்ப்பு 25 சதவிகிதத்தில் இருந்து 20 ஆக குறைந்துள்ளது.

இந்த மருந்து கொரோனாவால் ஏற்படும் இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத்துள்ளது என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக தலைமை ஆராய்ச்சியாளர் பீட்டர் தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் ஏற்படும் இறப்பு விகிதத்தை **குறைக்கும் டெக்சாமெத்தசோன் மருந்து நிச்சயம் பலன் அளிக்கும் என இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.** (2)

# இலை உதிர்ந்தால் மறுபடி துளிர்க்கும் இதுபோல்தான் ஐ.தே.கவும்



## இப்படிக் கூறுகிறார் ரவி

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் போட்டியிடுவது சிறிகொத்தாவைக் கைப்பற்றுவதற்கல்ல, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கே என சுட்டிக்காட்டிய அக்கட்சியின் உபதலைவரான ரவிகருணாநாயக்க, தேர்தலில் பிரதான போட்டி ஆளும் பொதுஜன பெரமுனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலேயே என்றும் தெரிவித்தார்.**

ஐ.தே.கவைச் சேர்ந்த குழுவினர் கட்சியிலிருந்து விலகிச் சென்று வாடகை வீட்டில் இருந்து கொண்டு தம்மை விமர்சிப்பது கவலையளிக்கின்றது.

ஐ.தே.க. பலம் வாய்ந்த விருட்சம். அதிலிருந்து இலைகள் விழுவதால் முழு மரமே பட்டுப்போய்விடாது என்றும் புதிய துளிர்களைக் கொண்டு மீண்டும் அது உயர்ந்து வளர்ந்து வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் வருமானப் பிரச்சினை அதிகரித்துள்ளது. இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு நாங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் முறையான செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதாக தெரியவில்லை.

கொரோனா வைரஸ் பரவலால் செலுத்த வேண்டியுள்ள வங்கிக்கடன் மற்றும் ஏனைய கடன்களை செலுத்துவதற்காக ஆறு மாத காலம் அவகாசம் வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்கு ஆட்டோ சாரதிகள் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயரத்னவின் கொலையே சான்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மக்களின் அசௌகரியங்கள் தொடர்பில் முறையிட சிறைச்சாலைத் தலைமையகத்தில் விசேட பிரிவு

(கொழும்பு)

மக்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் தொடர்பில் தெரிவிப்பதற்கு சிறைச்சாலை தலைமையகத்தில் விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

011 267 8600 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு மக்கள் தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் எச்.எம்.டி என். உபுல்தெனிய தெரிவித்தார்.

சிறைச்சாலை தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பிற்கான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு தொடர்பில் அனைத்து தகவல்களையும் தற்போது என்னால் வெளிப்படுத்த முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் சிறைச்சாலைகள் பாதுகாப்பானவையாக மாற்றியமைக்கப்படும்.

மேலும் மக்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் தொடர்பில் தெரிவிப்பதற்கு சிறைச்சாலை தலைமையத்தில் விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதில் வழங்கப்படும் தகவல்களின் இரகசியத் தன்மை பேணப்படும். 011 267 8600 என்ற இலக்கத்தில் இந்த பிரிவைத் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# தபால்மூல வாக்களிப்புத் திகதிகள் அறிவிப்பு மேலதிக திகதிகளிலும் வாக்களிக்கலாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு ஜூலை மாதம் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான நான்கு நாட்கள் இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்கத் தவறினால் ஜூலை 20 மற்றும் 21 ஆம் திகதி வாக்களிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளது.

தபால்மூல வாக்களிப்புக்கான திகதி தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரியவின் கையெழுத்துடன் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, குறித்த திகதிகளில் தபால்மூலம் வாக்களிக்க முடியாமல்போனால் வாக்காளர்கள் ஜூலை மாதம் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் அவர்கள் தொழில் புரியும் மாவட்டங்களில், மாவட்ட தேர்தல் காரியாலயங்களில் தபால்மூல வாக்கைப் பதிவு செய்யலாம்.

அத்துடன் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் தபாலிடும் நடவடிக்கை அடுத்த மாதம் 11,12 மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியாகம் செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் மாதம் 29 ஆம் திகதியுடன் நிறைவடையும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## செரியாமை

''வைத்தியரிடம் போகாமல் வாழ்வதற்கு வழி ஏதாவது சொல்லுங்கள்'' இப்படி ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டார் ஒருத்தர். அதற்கு அந்தப் பெரியவர் சுலபமான ஒரு வழியைச் சொன்னார். அது என்ன வழி என்றால்...

பசி எடுத்ததற்கு பிறகு கையை வாய்க்குக்கொண்டு போக வேண்டும். பசி குறைவதற்கு முன்னரே கையை வாயை விட்டு எடுத்து விட வேண்டும். இப்படி செய்கின்றவன் நோய் வாய்ப்பட மாட்டான் என்கின்றது அந்தப் பெரியவருடைய ஆலோசனை. இதற்கு என்ன அர்த்தம்?

பசிக்கிறதுக்கு முன்னரே சாப்பிடக்கூடாது. பசி முழுவதும் குறைகின்ற வரைக்கும் வயிறு நிறையச் சாப்பிட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. பசி வந்த பிறகு அளவாகச் சாப்பிடுபவர்களுக்கு நோய் நொடி வருவதில்லை. செரிமானக் கோளாறு இல்லாமலே பார்த்துக்கொள்ளவேண்டும். இப்படி பார்த்துக் கொண்டாலே பலவிதமான நோய்களில் இருந்து நாங்கள் தப்பித்துக்கொள்ளலாம்.

அஜீரணம் ஏன் வருகின்றது? உடம்பிலே கோளாறுகள் இருந்தாலும் இது வரும். காலம் தவறி சாப்பிடுவது – காரம், புளிப்பு அதிகமாக உள்ள உணவுகளை உண்பது – வெறும் வயிற்றிலே மது அருந்துவது – இவற்றினால் அஜீரணம் ஏற்படும்.

அதேமாதிரி அளவுக்கு மீறின சோகம், வருத்தம், மன உளைச்சல் இதனாலும் அஜீரணம் ஏற்படும். சில நேரம் வேறு நோய்க்காக சாப்பிடும் மருந்து மாத்திரைகள் கூட வயிற்றுக் கோளாறை உண்டாக்கும். அடிக்கடி தேநீர் குடிப்பது, சாப்பிடுவது, புகைப்பிடிப்பது இவை எல்லாம் அஜீரணத்தை இன்னும் அதிகமாக ஏற்படுத்தி விடும். சரியாக நித்திரை கொள்ளவில்லை என்றாலும் சரி... சரியாக உடற்பயிற்சி செய்யாவிட்டாலும் சரி இந்தக் கோளாறு வரும்.

ஆகவே அஜீரணம் ஏற்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. இதனாலே காரணத்தைக் கண்டு பிடித்து அதை சரி பார்க்க வேண்டும். இவை எல்லாம் இருக்கட்டும். செரிமானக்கோளாறு வராமல் இருப்பதற்கு நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இதற்கு சுலபமாக ஒரு நாலைந்து வழியை நிபுணர்கள் சொல்லுகின்றார்கள். அது என்ன தெரியுமா? ஒரே நேரத்திலே வயிறு நிறையச்சாப்பிடாதீர்கள். வயிறு நிரம்புவதற்கு முன்னரே சாப்பிடுவதை குறைக்கவேண்டும்.

ஒவ்வொரு சாப்பாட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை வைத்துக்கொள்ளுங்கள். அந்தந்த நேரத்திலே ஒழுங்காக சாப்பிட வேண்டும். சாப்பிடுவதற்கு நம்மை நாமே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். சாப்பிடும் போது அவசரம், பதற்றம் இருக்கக்கூடாது. பொறுமையாகச் சாப்பிட வேண்டும். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது எமது மனசுக்கு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். இப்படி சாப்பிடுவதற்கு எங்களை நாங்களே பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். எண்ணெயிலே பொரித்தது, வறுத்தது இவை போன்ற உணவுகளை கூடுதலான வரைக்கும் வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும்.

சில பேருக்கு வயிற்றிலே அமிலத்தன்மை கூடுதலாக இருக்கும். வயிற்றுப் புண்களுக்கான அறிகுறி இருக்கும். இப்படியானவர்கள் எல்லாம் வயிற்றை வெறுமையாக இருக்கவிடக் கூடாது. இப்படியான ஒரு சில வழிகளைக் கடைப்பிடித்தாலே போதும். உங்களுடைய வயிறு உங்களுக்குத் தொந்தரவு கொடுக்காது.

"உடம்பு நிறையைக் குறைப்பதற்கு என்ன வழி?" என்று ஒருவர் வைத்தியரிடம் யோசனை கேட்டார். "வேண்டாம்!" என்கின்ற சொல்லை தினம் மூன்று தடவை சொன்னால் நிறை குறைந்து விடும் என்றார் அவர். "அது எப்படி?" என்றார் இவர்.

"உங்களுடைய மனைவி காலை, மதியம், இரவு வேளையும் சாப்பிட வருகிறீர்களா? என்று கூப்பிடும் பொழுது எல்லாம் நீங்கள் இந்த வார்த்தையை சொல்லவேண்டும்" என்றார் வைத்தியர். 'சரி என்று சொல்லி விட்டுப்போனார் அவர்.

ஒரு வாரம் கழித்து அவரை கொண்டு வந்து வைத்திய சாலையில் சேர்த்தார்கள். உடம்பு மெலிந்து போய் விட்டது. குளுக்கோஸ் ஏற்றுவது போல் ஆகிவிட்டது. "என்னங்க இவ்வளவு மோசமாகிவிட்டது உடம்பு?" என்று கேட்டார் வைத்தியர்.

"அட போங்க டாக்டர். உங்களுடைய வார்த்தையை கேட்டு விட்டு போய் வீட்டில் சாப்பிடக்கூப்பிடும் போது எல்லாம் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லத் தொடங்கினேன். அதுக்குப்பிறகு என் மனைவி சாப்பிடக்கூப்பிடுவதையே நிறுத்தி விட்டார். இப்போது நான் உணவை கண்ணால் பார்த்து ஆறு நாட்கள் ஆகிவிட்டது வைத்தியரே!" என்றார் பரிதாபமாக!



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

கலாநிதி முருகர் குணசிங்கம்

01

### புலம் பெயர்வு பற்றிய கருத்தாக்கமும் வரலாற்றுப் பின்னணியும்

மனிதகுல வரலாற்றில், இனவெறி, மதவெறி, அதிகார வெறி என்பவற்றால், கொடூரமான படுகொலைகள் நிகழ்ந்தன. சொத்துகள் அழிக்கப்பட்டன. நாகரிகம் உச்சக்கட்ட வளர்ச்சியை அடைந்து இருக்கின்ற இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலுங்கூட, தனி மனிதனையும் உலக நாடுகளையும் மேற்கண்ட கொடூரங்கள் ஆட்டிப்படைத்துக்கொண்டு இருக்கின்றன. பொருளாதார, முதலாளித்துவக் காரணிகள், பணவெறி, பாலியல் வெறி போன்ற தனிமனித ஆசைகள் இன, மத, அதிகார வெறி ஆட்டங்களுக்குத் துணை போகும் சக்திகளாக வலம் வருகின்றன. வறுமை, பசி, பட்டினி, கல்வி அறிவு இன்மை ஆகிய மனித அவலங்களை மேற்படி அழிவுச்சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.



இவையே, யூத இனம் தமது தாயக மண்ணில் இருந்து சிதறடிக்கப்பட்டமைக்கும் ஆர்மேனியர்கள், ஆபிரிக்கர்கள், சீனர்கள், இந்தியர்கள் ஆகியோர் உலகின் பல பாகங்களுக்குச் சென்று அடைக்கலம் புகுந்ததற்கும் காரணங்கள் ஆகும். இதன் தொடர்ச்சியாக, கிழக்கு ஐரோப்பியர்கள், தென் அமெரிக்கர்கள், ஆபிரிக்கர்கள், தென்கிழக்கு ஆசியர்கள், மத்திய கிழக்கு நாட்டவர்கள் தமது சொந்த மண்ணில் இருந்து வெளியேறி, பூமிப்பந்தின் பல்வேறு பகுதிகளுக்குப் புலம் பெயர்ந்து சென்று வாழ வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். யூதர்களோடு தொடங்கிய இந்த மனித அவலங்கள் இன்றுவரை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இதுபற்றிய அறிவியல் சிந்தனைகள், இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் கல்விமான்கள், ஆய்வாளர்கள், அரசியல்வாதிகளின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஆனால், 1944-1948 காலப்பகுதியில் உலகையும் மனித சமூகத்தையும் உலுக்கிய இரண்டாவது உலகப் பெரும் போர் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திற்று. இதன் விளைவாக இனத்துவம், தேசியவாதம், பிறநாடுகளில் குடியேறுதல் போன்ற விடயங்கள், 1950 களில் இருந்து ஆய்வாளர்களாலும் கல்விமான்களாலும் உற்று நோக்கப்படுகின்ற ஆய்வுக்களமாக உருவெடுத்து வருகிறது. இருப்பினுங்கூட, புலப்பெயர்வு (Diaspora) பற்றிய தீவிர ஆய்வுகள் பெரிதும் கவனம் பெறவில்லை.

ஆனால், கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாகப் புலம் பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களும் கொடூரமான அனுபவங்களும் அதற்கான சமூக, சமய, கலாசார, பொருளாதார, அரசியல் பின்னணிகளும் ஆய்வு செய்யப்பட்டு, மனித குலத்தின் பார்வைக்கும் சிந்தனைக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்விமான்கள், பல்கலைக்கழக சமூகம், அங்கே கற்பவர்கள், ஆய்வாளர்கள், அரசியல் தரப்பினர், கொள்கை வகுப்பாளர்கள், மனித உரிமைகளில் அக்கறை கொண்டுள்ள தொண்டு நிறுவனங்கள், அரசு சார்பு அற்ற நிறுவனங்கள் இவற்றுடன் தனிநபர்களும் இந்த மனித அவலம் பற்றிய விடயத்தில் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றார்கள்.

இத்தகைய அறிவுசார் பங்களிப்பு இன, மத, அதிகார வெறிபிடித்து அலையும் மனிதர்களையும் இலாப நோக்கங் கொண்ட உலகமயமாக்கல் சுரண்டல்காரர்களையும் பொருளாதார வல்லரசு நாடுகளையும் சிந்திக்க வைக்கத் தவற மாட்டாது. மேலும், இவ்வாறான மனித வதைகளிலும் கொடுமைகளிலும் சிக்கிய மனித சமூகத்திற்கும் அவர்களது சொந்த நாட்டுக்கும் புலம்பெயர்ந்து வாழும் நாட்டுக்கும் இயன்ற வரையிலும் சமூக நீதியையும் மறுவாழ்வுக்கான உதவிகளையும் வழங்கத் தவற மாட்டாது.

சொந்த நாட்டில் இருந்து சிதறடிக்கப்பட்டு, அயல்நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த மனித இனங்கள் பற்றிய வரலாற்றுப் பதிவுகள், ஆய்வுகள் என்பன, கடந்த இரு தசாப்தங்களாக நூல் வடிவிலும் கட்டுரை வடிவிலும் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன. அவை யூத இனமாக இருக்கலாம், ஆர்மேனியர்கள், ஆபிரிக்கர்கள், சீனர்கள், இந்தியர்களாக இருக்கலாம், தென்னாபிரிக்கர்கள், தென் கிழக்கு ஆசியர்கள், தெற்கு ஆசியர்கள், கிழக்கு ஐரோப்பியர்கள், மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அவர்களது புலம் பெயர்வு குறித்த வரலாறுகள் ஆய்வு செய்யப்பட்டு நூல்களாக உருப்பெற்று இருக்கின்றன.

இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்கள், கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறிய அளவிலும் கடந்த மூன்று தசாப்தங்களாகப் பாரிய அளவிலும் உலகில் பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அவர்களைப் பற்றி ஆழமான ஆய்வுகள் எதுவும் இன்றுவரை வெளிவரவில்லை. ஒரு சில ஆய்வாளர்கள் சில கட்டுரைகளை மட்டும் எழுதி உள்ளார்கள். அவையும் ஒருசில நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களைப் பற்றிய பதிவாக மட்டுமே வந்திருக்கின்றன.

ஈழத்தமிழர்கள், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மன், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இத்தாலி, நோர்வே, டென்மார்க், சுவீடன், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் பல இலட்சக்கணக்கிலும் ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகள், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சிறு தொகையினராகவும் குடிபெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களது சமூக, சமய, மொழி, கலாசார, பொருளாதார, அரசியல் நிலைமைகளை ஆழமாகவும் அறிவியல் அடிப்படையிலும் ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்ய வேண்டிய ஒரு கட்டாயத் தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. எனவே, இந்த ஆய்வு உலகப் பந்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற ஈழத்தமிழர்களைப் பற்றியதாக இடம்பெறுகின்றது. அதிலும் குறிப்பாக, அகதிகளாகப் புலம்பெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்கள் பற்றிய விடயமே இவ்வாய்வில் இடம்பெறும்.

அத்துடன், "புலம் பெயர்வு" என்ற சொல்லின் பொருளையும் அதனோடு தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளையும் சுருக்கமாகக் கலந்துரையாடுவதன் மூலம், ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வினைப் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

புலம்பெயர்வு-Diaspobra என்னும் ஆங்கிலச் சொல், கிரேக்க வேர்ச் சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது. **Diasporic** என்னும் கிரேக்கச் சொல்லுக்கு "சிதறிய" (Dispersed) என்பது பொருள். எடுத்துக்காட்டாக, **New Webstor's Dictionary**[1] **'The dispersed Jews after the Babylonia Captivity'** என்று குறிப்பிட்டுள்ளது. அதாவது, 'பபிலோனியன் அடிமைத்தனத்திற்கு அல்லது சிறைபிடிப்பிற்குப் பின்னர் சிதறடிக்கப்பட்ட யூதர்கள்' எனப் பொருள் கொள்ளலாம்.

ஆனால், தற்காலத்தில் பொருளாதார, கல்வி, வேலைவாய்ப்பு நோக்குடன், தமது தாய்நாட்டில் இருந்து வெளியேறி, செல்வம் படைத்த நாடுகளுக்குச் சென்று வாழ்பவர்களையும் (expatriates) ஒரு நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களையும் (expelled) தனது நாட்டில் இருந்து பிறநாடொன்றில் குடியேறியவர்கள் (immigrants) அகதிகளையும் (refugees) அல்லது புலம் பெயர்ந்த மக்கள் அல்லது சிறுபான்மை இனமக்கள் (ethnic minority) ஆகியவர்களையும் உள்ளடக்கியதாக "புலம் பெயர்வு" Diaspora என்ற சொற்பதம் குறித்து நிற்கின்றது. மேலும் வரலாற்றுப் பார்வையில் புலம் பெயர்ந்த மக்கள் அவர்கள் சொந்த நாட்டில் இருந்து சிதறிப் பல நாடுகளில் வாழும் மனிதர்கள் என்று பொதுவாகப் பெருள் கொள்ளப்படுகின்றது. புலம் பெயர்வு என்னும் கருத்தாக்கம், முதன்முதலாக யூதர்கள் தங்கள் தாய்நாடான யூதேயாவை விட்டு வெளியேறியபோது பயன்படுத்தப்பட்டது.

புலம்பெயர்வு தொடர்பாக மானிடவியலாளர்கள், அரசியல் விஞ்ஞானிகள், சமூக விஞ்ஞானிகள், வரலாற்றாளர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவி வருவதை, இந்தத் துறை சார்ந்த பல்வேறுபட்ட ஆய்வு நூல்களில் காணலாம். அதுபற்றிய கலந்துரையாடல் இங்கு முக்கியம் அல்ல. இடம் பெயர்வு பற்றிப் பரந்த நோக்கில் பார்ப்பது தேவையற்ற ஒன்றாகத் தெரிகின்றது.

ஓர் இனம் தனது சொந்த நாட்டில் இருக்கும் இன, மத வெறியின் அடிப்படையிலும் அத்துமீறிய அதிகார வெறியின் பாதிப்புகளாலும் பாதுகாப்பாக வாழ வழி இன்றி, உயிருக்கு ஆபத்தான நிலைமையில் அந்த மண்ணில் இருந்து பிரிந்து, பல திசை நோக்கிச் சிதறி ஓடும் ஒரு நிலையே புலம் பெயர்வில் முக்கியத்துவம் பெறுகின்றது. மத வெறி, இன வெறி, அதிகார வெறி எவ்வளவு தூரம் ஒரு நாட்டையும் ஒரு நாட்டு மக்களையும் சீர்குலைத்து, நாசகார அழிவுகளை ஏற்படுத்தி, ஒரு குறிப்பிட்ட இன மக்களை நாடு அற்றவர்களாக ஆக்கி, உலகம் முழுவதும் சிதற வைத்து சித்திரவதைப்படுத்தியது என்பதற்கு யூதர்களுடைய துன்பியல் வரலாறு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

'புலம் பெயர்வு' என்பதனை ஒரு கருத்தாக்கமாக, சமூகவியல், மானுடவியல் தொடர்புள்ள, வரலாற்றோடும் கலாசாரத்தோடும் புவியியல் சார்ந்த அரசியலோடும் தொடர்புள்ள சொல்லாகப் புரிந்து கொள்ள வேண்டும். தனி மனிதர்களும் மனிதக் கூட்டங்களும் தாங்கள் பிறந்த நாட்டை விட்டு, நாட்டின் எல்லைகளையும் தேசிய வரையறைகளையும் கடந்து, தங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் ஒரு நாட்டுக்கு எவ்வாறு, என்ன காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்து செல்கின்றனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை

02




**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.


இதேபோன்று வன ஜீவராசிகள் திணைக்களம் 2016ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் நாகர் கோவில் இயற்கை ஒதுக்கிடம் என்று 7882 ஹெக்டெயர் நிலத்தையும் மன்னார் மாவட்டத்தில் விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கிடம் என்று 29,180 ஹெக்டெயர் நிலத்தையும் பறித்து வைத்திருக்கிறது. கடந்த 2017ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் இயற்கை ஒதுக்கிடமாக 4141 ஹெக்டெயர் நிலப்பரப்பும் நாயாறு இயற்கை ஒதுக்கிடமாக 4464 ஹெக்டெயர் நிலப்பரப்பும் சுவீகரிக்கப்பட்டுள்ளது."

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசின் இந்த நிலக்கையகப்படுத்தல்கள் எல்லாம் சுற்றுச்சூழலைக் காப்பாற்றுகின்ற பசுமை நடவடிக்கைகளாகவே உலகத்தின் கண்களுக்குத் தெரியும். ஆனால், இவை பச்சை முகமூடி அணிந்துகொண்டு அரசு தந்திரமாக எம்மீது தொடுத்திருக்கின்ற ஒரு பச்சை யுத்தம். இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள எமது நிலங்களை விடுவிக்கக்கோரி நாங்கள் நடத்துகின்ற போராட்டங்களின் நியாயத்தை உலகம் ஏற்றுக்கொள்ளும். உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக இந்த நிலங்களை அரசாங்கம் விடுவிக்கவும் நேரும். இதனால்தான் எவரும் ஆட்சேபிக்காத இயற்கைப் பாதுகாப்பு என்ற போர்வையில் இப்படி ஒரு நில ஆக்கிரமிப்பை அரசு மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. வனவளத் திணைக்களமும் வன ஜீவராசிகள் திணைக்களமும் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்கள். காலம் காலமாக இவர்கள் பயிர் செய்துவந்த நிலங்கள். இவர்கள் படித்த பாடசாலைகள் உள்ள இடங்கள்.

ஆனால், இனிமேல் மக்கள் இங்கு இவை எவற்றையும் செய்யமுடியாது. செவ்விந்தியர்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்களை அங்கு குடியேறிய ஐரோப்பியர்கள் தேசியப் பூங்காங்களாகப் பிரகடனப்படுத்தியே அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி அவர்களின் நிலங்களைப் பிடுங்கினார்கள் என்று தெரிவித்தார்.

## உள்நாட்டுப் போரின் பின் காணிப்பிரச்சினைகள் உருவான பின்னணி என்ன?

### வடக்கின் வசந்தம்

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் என்பது இலங்கை உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டமாகும். இத்திட்டம் இலங்கையின் 2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது. இவ்வேலைத்திட்டம் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

> **வடக்கின் வசந்தம் வேலைத் திட்டமே வடமாகாணத்தில் புதிய காணிப் பிரச்சினைகள் தோன்றக் காரணம் என்ற கருத்தும் மக்களிடையே உண்டு.**

முதற்கட்டமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான கட்டாயத்தேவைகளை பெற்றுக் கொடுத்தலும் மீள் குடியேற்றலும் (180 நாள் துரித திட்டம்) இரண்டாம் கட்டமாக வடக்கின் உட்கட்டமைப்புகளை செப்பனிடலும் (இடைக்கால திட்டங்கள்) மூன்றாம் கட்டமாக தொழிற்றுறை அபிவிருத்தித் திட்டங்களும் (நீண்டகால திட்டங்கள்) என்ற முறையில் நடைபெற்றன.

இத்திட்டம் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் ஓரளவு முற்றுப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் கேள்விக்குரியது என்னவென்றால் முதற் கட்ட செயற்பாடாக சுண்டிக்குள பிரதேசத்தில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டார்கள். அதன் 2ஆம் 3ஆம் கட்ட செயற்பாடுகளாக மீள் குடியேற்றிய மக்களை வெளியேற்றும் செயற்பாடாகவே காணப்படுகிறது.

## வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு (Integrated Strategic Environment Assessment for the Northern Province)

'வடக்கின் வசந்தம்' மூலம் வடக்கில் வேகமான வளர்ச்சியை செயற்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் அல்லது முடிவுகளினால் எதிர்மறை விளைவுகள் உருவாவதை தவிர்க்க (அதாவது இயற்கை வளங்களுக்கு குறைந்தபட்ச சேதத்தை ஏற்படுத்துதல்) சாத்தியமான சுற்றுச்சூழல் பற்றிய புரிதல் மற்றும் ஒரு தெளிவான தகவலை வழங்குவதற்காக ஒரு மதிப்பீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

வட மாகாணத்தின் நிலையான வளர்ச்சியை நோக்கிய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவுவதற்காக, இலங்கை மத்திய சுற்றுச்சூழல் சபையால் மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீட்டு (Strategic Environmental Assessment) ஆய்வினைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இச்சபை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் (D.M.C) சேர்ந்து இவ் ஆய்வினைத் தொடங்கியது.

> **வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தால் சூழலுக்கு ஏற்படும் எதிர்மறை விளைவுகளை ஆய்வு செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இம் மதிப்பீட்டு ஆய்வுக்குழுவில் வடமாகாணத்தின் சுற்றுச்சூழலை நன்கு அறிந்த தமிழர் எவரும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இதுவே பல பிரச்சினைகள் தோன்றக் காரணமாயிற்று.**

இவ் இரு நிறுவனங்களும் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை அரசிடமிருந்தும் மற்றும் U.N.D.P இடமும் பெற்று வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு (Integrated Strategic Environment Assessment for the Northern Province) என்ற பெயரில் வட மாகாண வளத்தை ஆய்வு செய்தன.

இந்த ஆய்வு 2009 இல் தொடங்கப்பட்டு 2012 இல் நிறைவடைந்தது. இருப்பினும் வரைவு அறிக்கையில் உள்ள பரிந்துரைகளில் சிலவற்றை திருத்த 2014 இல் மீண்டும் மீள் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

இம் மீள் மதிப்பாய்வின் போதும் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட சுண்டிக்குளம் பிரதேசத்தை கவனத்தில் எடுக்காதது மிகப் பெரிய குறைபாடாகும்.

இவ் ஆய்வுக்கு இக் குழுவுடன் பல பங்குதாரர்களும் (Stake holders) இணைந்து கொண்டனர். அவ்வாறு பங்களிப்பு செய்த முக்கிய நிறுவனங்கள் பின்வருவனவாகும்.

1)தொல்பொருள் திணைக்களம்
(Archaeology Department)

2) மத்திய சுற்றுச்சூழல் சபை
(Central Environmental Authority)

3) வனத்துறை திணைக்களம்
(Department of Forest)

4) வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களம்
(Department of Wildlife Conservation)

5) அனர்த்த முகாமைத்துவ நிலையம்
(Disaster Management Centre)

6) புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம்
(Geological Survey and Mines Bureau)

7) நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்
(National Aquatic Resources Research and Development Agency)

8) நகர அபிவிருத்தி சபை
(Urban Development Authority),

9) நீர்வள சபை
(Water Resource Board) என்பன.

## இம் மதிப்பீட்டு ஆய்வின் முக்கிய நோக்கங்களாக

❖போரின் பின் மீதமுள்ள சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும் தனித்துவமானது வடக்கு மாகாணத்தில் சுற்றுச்சூழல் அம்சங்களான வன மற்றும் வனஜீவராசிப் பகுதிகள், சதுப்பு நிலங்கள், கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகள், தொல்பொருள் மற்றும் கலாசார வளங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தலும் மற்றும் கவனமாக நிர்வகிக்க நடவடிக்கை எடுத்தலும் .

❖வடக்கு மாகாணத்தில் உள்ள சுற்றுச்சூழல் சொத்துக்களான நீர் வளம் , கடலோர வளங்கள், கடல் போன்றவற்றை மேலும் வளப்படுத்த தரவு தளத்தினை (Data Base) வளப்படுத்த நடவடிக்கை எடுத்தல் போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம்.

வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இம் மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இம் மதிப்பீட்டு ஆய்வுகள் வட மாகாணத்தின் நிலப்பயன்பாடு (Land Use), பொருளாதார வளங்கள் (Economic Resources), தாவரங்கள் மற்றும் விலங்குகள் (Flora & Fauna), வனப்பரப்பளவு (Forest Cover), வனவிலங்கு பாதுகாப்பு பகுதிகள் (Wildlife Conservation Areas), கடலோர மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகள் (Coastal and Marine Ecosystems), பல்வகை உயிரினங்கள் (Biodiversity), மண், விவசாயம் மற்றும் மீள்குடியேற்றம் (Soil, Agriculture & Resettlement), நீர் (Water), கடலோரப் பகுதிகளில் நீர் தரம் (Water Quality in Coastal areas), இயற்கை அனர்த்தங்கள் (Natural Disasters), கலாசார பாரம்பரியம் (Cultural Heritage), தாதுக்கள் மற்றும் பொருட்கள் (Minerals and Materials) போன்ற தலைப்புகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

(தொடரும்...)

# தமிழர் மனங்களை வெல்லும் சூட்சுமம் தெரியாத ஆட்சியாளர்கள்



ஒரே நாட்டில் வாழ்கின்ற சக இன மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைப் பிற்போடுவது ஆரோக்கியமான அரச நிர்வாகமாக அமையாது. நீண்டகாலத்திற்கு அதனை இழுத்தடித்து, அந்தப் பிரச்சினையை மழுங்கடித்து விடலாம் என்ற நப்பாசையில் ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதைக் காண முடிகின்றது. ஆனால் அவ்வாறு அந்தப் பிரச்சினையை இல்லாமல் செய்துவிட முடியாது.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளும், ஆட்சியாளர்களும் இந்த "பிற்போட்டு மழுங்கடிக்கும்" தந்திரோபாயத்தைத்தான் பின்பற்றி வருகின்றார்கள்.

இத்தகைய போக்கு நீண்ட காலத்திற்கு அவர்களுக்கு வசதியானதாக அமையாது. ஏனெனில் சக இன மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், அவர்களை திருப்தியற்ற நிலையில் வைத்திருப்பது பேரின மக்களின் நிம்மதியைக் குலைப்பதற்கான முயற்சியாகவே ஒருநாள் மாறும்.

ஏனெனில் பல்லின மக்களும் பல மதங்களைப் பின்பற்றுகின்ற மக்களும் வாழ்கின்ற பன்மைத் தன்மை கொண்டதாக நாடு திகழ்கின்றது. எனவே அரசியலில் மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும் பன்மைத்தன்மை பேணப்பட வேண்டியது அவசியம். பன்மைத்தன்மை இல்லையேல் நாட்டின் முன்னேற்றம் தடைப்படும், தடைகள் ஏற்படும்.

இலங்கை ஒரு தீவு. சிறிய தீவக நாடு என்ற காரணத்திற்காக வேண்டுமானால் ஒற்றையாட்சி முறை அவசியம் என்று வாதிடலாம். ஆனால் அந்த ஒற்றையாட்சி என்பதற்கு ஒரே இனம், ஒரே மக்கள், ஒரே நாடு, ஒரே மதம் என்ற வரைவிலக்கணம் பொருத்தமாக அமையமாட்டாது.

பல இனங்களும் பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற மக்களையும் நாடு கொண்டிருக்கின்றது. ஆகவே பல்லினத்தன்மை பேணப்பட வேண்டியது அவசியம்.

சிறுபான்மை இன மக்களை ஒரே இனமாக மாற்றுவது என்பது சாத்தியமாகாது. அதேபோன்று அனைத்து மக்களும் ஒரே மதத்தைப் பின்பற்றுபவர்களாக மாறுவார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது. கடுமையான சர்வாதிகாரப் போக்கைக் கொண்ட சீனாவில்கூட இத்தகைய ஓரினத்தன்மையை நடைமுறைப்படுத்த முடியாமல் ஆட்சியாளர்கள் அவதிப்படுகின்றார்கள்.

மக்களுடைய மதச் சுதந்திரம், மொழியுரிமை, கலை, கலாசாரப் பண்பாட்டு உரிமைகளை இலகுவில் மாற்றி அமைத்துவிட முடியாது. அவற்றை இலகுவில் தூக்கி எறிந்துவிடலாம் என்பது நடவாத காரியமாகும்.

சிறுபான்மை இன மக்களும் இந்த நாட்டின் தேசிய இனம் என்பதை அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். பாரம்பரிய வரலாற்றுப் பெருமையைக் கொண்ட சிறுபான்மை இன மக்கள் இந்த நாட்டின் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில் ஒரு தேசிய இனம் சக தேசிய இன மக்களுக்கு இரண்டாந்தரக் குடிமக்களாக வாழ முடியாது. வாழவும் கூடாது. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், மனித நாகரிகமும் வளர்ச்சியடைந்துள்ள இந்த நவீன காலத்தில் இத்தகைய ஆண்டான் அடிமைத்தனத்தை நோக்கிய அரசியல் பயணம் ஆரோக்கியமாக இருக்க மாட்டாது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருந்தபோதே இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும். ஆனால் அதனை அவர்கள் செய்யவில்லை.

சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்று நம்புகிறோம் என்று கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அளித்த



நேர்காணலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டிருந்தார். தமிழருக்கு ஒரு தீர்வு கிடைப்பதை, ஜனாதிபதி ராஜபக்ஷவினாலும் தடுக்க முடியாது. எவராலும் தடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கூற்று அவருடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற அதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ராஜபக்ஷக்கள் ஆர்வமற்றிருப்பதையும் அவர் வெளிப்படுத்தி இருந்தார். இது ஓர் அரசியல் ரீதியான கருத்தேயன்றி வேறு ஒன்றுமில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஆட்சியாளர்கள் நாட்டமில்லாதிருப்பதைச் சுட்டிக்காட்டிய அதேவேளை, இந்த விடயத்தில் சர்வதேச அழுத்தம் இருக்கின்றது. சர்வதேசம் இந்த விடயத்தில் அக்கறை கொண்டிருக்கின்றது என்பதையே அவர் சுட்டிக்காட்டி இருந்தார்.

ஆனால் சம்பந்தனின் இந்தக் கருத்து ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வெருட்டுவதாகவே அரச தரப்பினருக்கு உறைத்திருக்கின்றது. இதனால் தான் இந்த நேர்காணல் குறித்து கருத்து வெளியிட்ட அரச தரப்புப் பேச்சாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமாகிய கெஹலிய ரம்புக்வெல விடுதலைப் புலிகளின் பாணியில் மிரட்டி தீர்வு கேட்பதை கூட்டமைப்பினர் கைவிட வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பை அரவணைத்துச் செல்வதற்கே அரசு விரும்புகின்றது. ஆனால் கூட்டமைப்பு இன்னும் பழைய நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது. கூட்டமைப்பினர் தங்களுடைய நிலைப்பாடுகளைக் காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் பாணியில் மிரட்டி தீர்வு கேட்ப தைக் கைவிட வேண்டும். தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை எப்போது வழங்க வேண்டும் எப்படி வழங்க வேண்டும் என்று அரசுக்குத் தெரியும் என முன்னாள் அமைச்சரும் அரச பேச்சாளருமாகிய கெஹலிய ரம்புக் வெல கூறியுள்ளார்.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு தேர்தலில் ராஜபக்ஷக்கள் அமோகமாக வெற்றி பெற்றிருக்கின்றார்கள். இந்தத் தேர்தல் வெற்றியிலும் பார்க்க நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி என்ற நாட்டின் அரச தலைவர் பதவி முக்கியமானது. அது முழு நாட்டிற்கும் தலைமை ஏற்று ஆட்சி நடத்து கின்ற பொறுப்பாகும்.

நாட்டின் தலைவர் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் தேர்தலில் தம்மைவிட்டுப் பிரிந்திருந்த அல்லது விலகியிருந்த மக்களின் மனங்களையும் வென்று அடுத்த தேர்தலில் முழு நாட்டு மக்களினதும் ஆதரவையும் அபிமானத்தையும் பெற முயற்சிப்பதே சிறந்த அரசியல் சாணக்கியமாகும். அதற்கு அரச தரப்பிலேயே அரசியல் ரீதியான மனமாற்றம் ஏற்பட வேண்டும்.

முப்பது வருடங்களாகத் தொடர்ந்த யுத்தத்தினால் நாடு இரண்டாகப் பிளவுபட்டிருந்தது யுத்தத்தில் அடைந்த வெற்றியின் மூலம் நாடு நில வழியில் ஒன்றாகி இருக்கின்றது. ஆனால் நாட்டு மக்கள் இன்னும் ஒன்றிணையவில்லை.

அதனால் நாடு முழுமையாக ஒருமைப்படவில்லை என்பது கசப்பான உண்மை. இந்தக் கசப்பு நிலைமையை வளரவிடுவதும், அல்லது தொடரவிடுவதும் நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து நாடு இன்னும் முழுமையாக மீளவில்லை. பதினொரு வருடங்கள் கழிந்துவிட்டன. இதற்கிடையில் கொரோனா வைரஸ் என்ற நச்சுக்கிருமி நாட்டை ஆக்கிரமித்து பொருளாதார ரீதியாகவும் சமூக



ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பாதிப்புகளில் இருந்து மீண்டு எழுவதற்கு நாட்டு மக்களும் ஆட்சியாளர்களும் ஏனைய தரப்பினரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

எனவே தவிர்க்க முடியாத இந்தத் தேவையை உணர்ந்து அரசும் அரச தரப்பினரும் தங்களுடைய அணுகுமுறைகளை மாற்றி முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். அதன் மூலம் அனைவரையும் சுபீட்சமான ஒரு நிலைமையை நோக்கி நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களையே சார்ந்திருக்கின்றது.

நன்றி :- இணையம்

# இரு நபர்களிடையே மோதல் ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

அங்குலானை பகுதியில் இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஒருவர் தாக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள பாலத்திற்கு கீழ் தள்ளிவிடப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

அங்குலானை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காலி வீதி பாலமொன்றிற்கருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் பாலத்திற்கு கீழ் தள்ளிவிட்ட நிலையில் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் மொரட்டுமல்ல பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை கைது செய்துள்ள அங்குலானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# கைதிகளுக்கு தொழில்வாய்ப்பு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

**சிறைக் கைதிகளுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சிறைச்சாலை புனர்வாழ்வு மற்றும் திறன் அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைக் கைதிகளுக்கு கட்டட நிர்மாணத்துறையில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டவுள்ளன.

முதற்கட்டமாக வெலிக்கடை சிறைச்சாலையில் 7 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்ற 120 கைதிகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருட்களுடன் தொடர்புடைய கைதிகளின் பின்புலம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும், அவர்களை இதிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் தொடர்பிலும் மற்றும் அவர்களுக்கான புனர்வாழ்வு உள்ளிட்டவை பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக் சிறைச்சாலை புனர்வாழ்வு மற்றும் திறன் அபிவிருத்தி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# இலங்கை மத்திய வங்கி நியதி ஒதுக்க வீதத்தை குறைத்தது

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நியதி ஒதுக்க வீதத்தை மேலும் குறைத்துள்ளது. நேற்று முன்தினம் ஒன்றுகூடிய நாணயச் சபை இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி மேலும் தெரிவிக்கையில்.

இந்த நடவடிக்கை மூலம் உள்நாட்டு நாணயச் சந்தைக்கு மேலதிகமாக 115 பில்லியன் ரூபா கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளின் நிதிச்செலவை குறைத்து பொருளாதாரத்திற்கான புழக்கத்தை அதிகரிக்க முடியும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளாக மோசமான மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் எதிர்காலத்தில் பொருளாதாரம் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு மீது தீவிர அழுத்தம் உருவாகக் கூடும் என இலங்கை மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஜ-8)

# குணமடைந்தோர் 1397

நாட்டில் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நேற்று மேலும் 26 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி தற்போது வரை 1397 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரையில் 740 கடற்படையினர் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


# மதுபோதையில் கிணற்றில் விழுந்து ஒருவர் உயிரிழப்பு

(வெலிமட)

வெலிமட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பில்லகடே, மல்பொத்த பகுதியில் நேற்று கிணற்றில் விழுந்து நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மல்பொத்த, மீரகஹவத்த பகுதியை சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கிணற்றில் விழுந்த நபரை பிரதேசவாசிகள் வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பில் வெலிமட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2052

**மதி**



தன் இனங்களை பாதுகாத்திட வேண்டும் என்ற ஐந்தறிவுள்ள இவைகளுக்கு இருக்கும் உணர்வு கூட ஆறறிவுள்ள மனிதர்களுக்கு இல்லாமல் போனது கவலைக்கிடமே

**லத்தீஸ்**



கோபமும் ரசிக்கப்படுவதாக இருந்தால் அங்கு புரிதல் கொண்ட மனங்களை காதல் ஆள்கிறது

**சங்கீத்**



வேடிக்கையான நம் நண்பர்களுடனான நம் நேரம் நம் கவலைகள் அனைத்தையும் மறக்கச் செய்யும்

**சாரா**



முகங்கள் ஒதுக்கப்படுகிறது, முகமூடிகள் வரவேற்கப்படுகிறது

**டினா**



உலகில் விடுமுறை இல்லாத ஒரேயொரு வேலை இல்லத்தரசி

**மிது**



எடுத்தவன் ஏப்பமிடுகிறான், கொடுத்தவன் சாபமிடுகிறான்- இலஞ்சம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மீண்டும் தொற்றுக்குள்ளான பெண்ணால் வைரஸ் பரவுவதற்கு வாய்ப்பில்லை

## அனில் ஜாசிங்க விளக்கம்

(கொழும்பு)

**அநுராதபுரம் - கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பெண்ணின் ஊடாக வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புகள் இல்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க விளக்கமளித்துள்ளார்.**




இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான சம்பவங்கள் கடந்த சில நாட்களில் பல இடம்பெற்றுள்ளன என்றும் எனினும் அவர் கிருமித் தொற்று நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்டவர் என்பதால் அவரிடமிருந்து வேறொரு நபருக்கோ அல்லது தொற்று பரவுவதற்கோ வாய்ப்பில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொற்றாளரின் உடலில், இறந்த RNA பாகங்கள் இருப்பதாலேயே அவர் மீண்டும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் தொற்றுக்குள்ளான பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் எவரும் தனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இலங்கை-ஈரான் உறவுகளை வலுவூட்டுவது தொடர்பில் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கையுடனான உறவுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தமது நாடு எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான ஈரான் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஈரான் தூதுவர் ஹஷிம் ஹஷ்ஜ சாதேஹ் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின்போது இந்த உறவுகளை மேலும் பலப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும் இவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுவூட்டுவது தொடர்பாக அமைந்திருந்தது.

இலங்கை ஈரானுக்கு 150 தொடக்கம் 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இலங்கை மேற்கொள்ளும் ஏற்றுமதிகளில் ஈரான் இரண்டாம் இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காது

## வாய் திறந்தார் கெஹலிய

(கண்டி)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது தரப்பினருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்காது என முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவ்வாறு கிடைக்க வேண்டுமானால் மேலும் சிலரின் ஆதரவு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேறு தரப்பினரின் ஆதரவை பெறாமல் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மாற்ற முடியாது எனவும் அந்த அணி தேவையில்லை, இந்த அணி தேவையில்லை என கூறினால் 115 முதல் 118 ஆசனங்களை பெற்று அரசாங்கத்தை மாத்திரமே அமைக்க முடியும் என



அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# செய்தித்துளிகள்

## கடந்த இரண்டு மாதங்களில் 594 மெட்ரிக் தொன் தேயிலை ஏற்றுமதி

(கொழும்பு)

கொரோனா பரவல் காரணமாக ஏற்றுமதித் துறையில் சிரமங்கள் இருந்தபோதிலும் கடந்த இரண்டு மாதங்களில் 594 மெட்ரிக் தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது என வெளி விவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 344 மெட்ரிக் தொன் தேயிலை துருக்கிக்கும் மற்றும் 220 மெட்ரிக் தொன் தேயிலை எகிப்துக்கும், 30 மெட்ரிக் தொன் தேயிலை ஓமானுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் இந்த ஏற்றுமதிகள் அனைத்தும் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் மற்றும் தேயிலை வாரியத்தின் உதவியுடன் சாத்தியமானது என்றும் தேயிலை மற்றும் இறப்பருக்கான புதிய சந்தை யும் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியும் சவாலான சூழ்நிலையை எதிர்கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளதாக வெளி விவகார அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-8)

## ஈ.ரி.ஐ. நிறுவனத்தின் நான்கு பணிப்பாளர்களுக்கு பிடியாணை



(கொழும்பு)

ஈ.ரி.ஐ (ETI) நிறுவனத்தின் 4 பணிப்பாளர்களுக்கும் எதிராக கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதி பிரியந்தலியனகே நேற்று பிடியாணை பிறப்பித்தார்.

ஈ.ரி.ஐ (ETI) இன் இயக்குநர்கள் ஜீவகா எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க, நலக எதிரிசிங்க மற்றும் தீபா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராகவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## யானையின் சடலம் மீட்பு

(ஹபரண)


ஹபரண-தும்பிகுளம் வனப்பகுதியில் மிருகங்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் ஹக்கபட்டஸ் வெடித்ததன் காரணமாக உயிரிழந்த யானையின் சடலமொன்று வனவிலங்கு அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை கனேவெல்பொல வன விலங்கு காரியாலய அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த காட்டு யானையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 140 | 120 |
| தக்காளி | 180 | 240 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 150 | 130 | 130 | 160 |
| கரட் | 140 | 180 | 180 | 200 |
| பூசணி | 50 | 40 | 135 | 50 |
| புடோல் | 60 | 50 | 60 | 120 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 40 | 60 |
| லீக்ஸ் | 140 | 150 | 160 | 200 |
| பீற்றூட் | 120 | 130 | 120 | 140 |
| கறிமிளகாய் | 80 | 80 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 500 | 300 | 500 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 60 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 60 | 100 |




# மனதை ஒருமுகப்படுத்தினால் வெற்றி



சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் ஓர் ஊரில் தங்கியிருந்தார். அங்கு ஒரு நீரோடையும் பாலமும் இருந்தன. ஒரு நாள் சுவாமி விவேகானந்தர், நீரோடைக் கரையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அங்கு இளைஞர்கள் சிலர், முட்டையோடுகளைத் துப்பாக்கியால் குறிவைத்து சுடுவதற்குப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள், முட்டையோடுகளை ஒரு நூலில் கட்டி, நீரோடையில் மிதக்க விட்டிருந்தார்கள்.

அந்த நூல், நீரோடைக் கரையிலிருந்த சிறிய ஒரு கல்லில் கட்டப்பட்டிருந்தது. நீரோடை நீரின் அசைவுக்கு ஏற்ப, நூலில் கட்டப்பட்டிருந்த முட்டையோடுகள் இலேசாக அசைந்து கொண்டிருந்தன. இளைஞர்கள் பாலத்தில் நின்று, ஓடை நீரில் அசைந்து கொண்டிருக்கும் முட்டையோடுகளைச் சுடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் துப்பாக்கியால் முட்டையோடுகளைச் சுட்டார்கள். ஆனால் அவர்கள் வைத்த குறி தவறித் தவறிப் போயிற்று.

ஒரு முட்டையோட்டைக் கூட அவர்களால் சுட முடியவில்லை. இளைஞர்களின் இந்தச் செயலை விவேகானந்தர் பார்த்தார். இவர்களால் இந்த முட்டையோடுகளைச் சுடமுடியவில்லையே என்று நினைத்தார். அதனால் அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இதை அங்கிருந்த இளைஞர்களில் ஒருவன் கவனித்தான்.

அவன் விவேகானந்தரிடம், பார்ப்பதற்கு இந்த முட்டையோடுகளைச் சுடுவது சுலபமான செயல் போன்று தெரியும். ஆனால் நீங்கள் நினைப்பது போல், இந்த முட்டையோடுகளைச் சுடுவது அவ்வளவு சுலபமான செயல் அல்ல. நீங்களே முயற்சி செய்து பாருங்கள் அப்போது உங்களுக்கே தெரியும் என்று கூறினான். சுவாமி விவேகானந்தர் துப்பாக்கியைக் கையில் எடுத்தார்.

அங்கிருந்த முட்டையோடுகளைக் குறி வைத்து சுட ஆரம்பித்தார். அப்போது அங்கு சுமார் பன்னிரெண்டு முட்டையோடுகள் நீரோடையில் மிதந்து கொண்டிருந்தன. விவேகானந்தர் வைத்த குறி ஒன்று கூட தவறவில்லை. வரிசையாக அவர் ஒவ்வொரு முட்டையோடாகச் சுட்டார். அங்கிருந்த அத்தனை முட்டையோடுகளும் வெடித்துச் சிதறின இதைப் பார்த்து அங்கிருந்த இளைஞர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள்.

அவர்கள் விவேகானந்தரிடம், நீங்கள் துப்பாக்கிச் சுடுவதில் ஏற்கனவே நல்ல பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். அதனால் தான் நீங்கள் அத்தனை முட்டையோடுகளையும் ஒரு குறி கூடத் தவறாமல் சுட்டீர்கள், இல்லையா? என்று வினவினார்கள். அதற்கு விவேகானந்தர், என் வாழ்நாளில் இன்று தான் நான் முதன்முறையாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன் என்றார்.

அவர் கூறியதை இளைஞர்களால் நம்ப முடியவில்லை. அவர்கள், அப்படியானால் ஒரு குறி கூடத் தவறாமல் உங்களால் எப்படி முட்டையோடுகளைச் சுட முடிந்தது? என்று கேட்டார்கள். அதற்கு விவேகானந்தர், எல்லாம் மனதை ஒருமுகப்படுத்துவதில் தான் இருக்கிறது. மனதை ஒரு முகப்படுத்திச் செய்யும் எந்தச் செயலும் வெற்றியைத் தரும் என்று பதிலளித்தார். வெற்றியின் இரகசியம் மனத்தை ஒருமுகப் படுத்துவதில் தான் இருக்கிறது. உயர்ந்த மனிதனையும் தாழ்ந்த மனிதனையும் ஒப்பிட்டுப்பார். இருவருக்கும் உள்ள வேறுபாடு, தங்கள் மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கும். மனத்தை ஒருமுகப் படுத்தும் ஆற்றல் வளர, வளர, அதிக அளவில் அறிவைப் பெறலாம்.

ஏனென்றால் இந்த வழி தான் அறிவைப் பெறுவதற்கு உரிய ஒரே வழி. தாழ்ந்த நிலையில் உள்ள செருப்புக்கு மெருகு போடுபவன், மனத்தை அதில் அதிகம் ஒரு முகப்படுத்திச் செய்தால், மேலும் சிறப்பாகச் செருப்புகளுக்கு மெருகு பூசுவான். மனத்தை ஒருமுகப் படுத்திச் செய்யும் சமையற்காரன் மேலும் சிறந்த முறையில் உணவு சமைப்பான்.

பணம் சேர்ப்பதோ, கடவுள் வழிபாடோ அல்லது வேறு எந்த ஒரு வேலையானாலும் மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வளர வளர, மேலும் சிறப்பாக அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கலாம்.


## விடுகதைகளும் விடைகளும்


1. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
தேள்
2. பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?
தலைமுடி
3. உடம்பில்லா ஒருவன் பத்துச் சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?
வெங்காயம்
4. கசக்கிப் பிழிந்தாலும் கடைசி வரை இனிப்பான். அவன் யார்?
கரும்பு
5. மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன?
விழுது
6. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன?
பட்டாசு
7. ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, ஸ்ரீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?
மூச்சு
8. கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான். அவன் யார்?
பூரி
9. கறுப்பு நிறமுடையவன், கபடம் அதிகம் கொண்டவன், கூவி அழைத்தால் வந்திடுவான், கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் அவன் யார்?
காகம்
10. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள் ?
வெண்டைக்காய்

## வழிகாட்டுங்கள்



## புள்ளிக்கோட்டினை இணைக்குக




## மூளைக்கு வேலை

01) 3வாத்துக்கள் 3 நாட்களில் 3 முட்டைகள் கொடுத்தால் 300 வாத்துக்கள் 300 நாட்களில் எத்தனை முட்டைகள் கொடுக்கும்?



பேசாதே, செயல்படு இதை உன் மனதில் குறித்துக் கொள். வார்த்தைகள் ஒருபோதும் தேவையில்லை. செயலே வாழ்வின் ஆதாரம்.

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அண்டை நாட்டில் ஆபத்து அவதானம் மிகத் தேவை

இந்திய தேசத்தில் கொரோனாத் தொற்று நோய் உருத்திர தாண்டவம் ஆடுவது கண்டு மனம் நொந்து போயுள்ளோம்.

இந்திய தேசத்தில் வேகமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்றில் இருந்து பாரத மக்களைக் காப்பாற்ற வேண்டுமென நாம் அனைவரும் ஆன்மிக தியானம் செய்ய வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, அகண்ட இந்திய தேசம் என்பதற்குள் இலங்கையும் உட்பட்டதாகவே நாம் நோக்க வேண்டும்.

இந்திய தேசத்தின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியம், ஆன்மிகம் என்பன எங்ஙனம் எங்கள் மண்ணில் வேரூன்றினவோ அதுபோல இந்தியாவில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட நோய் அனர்த்தங்களும் எங்கள் நாட்டை விட்டுவைக்கவில்லை.

அந்தளவுக்கு இந்தியாவும் இலங்கையும் ஏதோவொரு வகையில் நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளன.

ஒரு காலத்தில் பசுந்தீவு என்றழைக்கப்பட்ட நெடுந்தீவில் இருந்து பசும்பால் இராமேஸ்வரத்துக்குப் படகுகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டதான உண்மைக் கதைகள் உண்டு.

தவிர, இந்திய கடற்றொழிலாளர்களும் ஈழத்துக் கடற்றொழிலாளர்களும் கடல் எல்லைகளில் சந்திப்பதும் உரையாடுவதும் சர்வசாதாரணமான விடயங்கள்.

இதற்கு மேலாக, நம் நாட்டை ஆட்டிப்படைக்கும் போதைவஸ்து விவகாரத்தில் இலங்கை இந்திய போதைவஸ்து வர்த்தகர்களிடையே கடலிடைத் தொடர்புகள் இருப்பதான தகவல்களும் உள்ளன.

இந்நிலையில் இந்தியாவை ஆட்டிப் படைக்கும் கொரோனாத் தொற்று; எங்கள் வடபுலத்துக்கு வரக்கூடிய ஆபத்துக்கள் உண்டென்பதை சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

இலங்கையில் இரண்டாவது அலையாக இந்தியாவில் இருந்து கொரோனத் தொற்று ஏற்படலாம் என்ற எச்சரிக்கையை நாம் எவரும் உதாசீனம் செய்து விடக்கூடாது.

மாறாக, கொரோனா நோய்த் தொற்றிலிருந்து எங்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதே இங்கு சாலப் பொருத்தமான விடயமாகும்.

அதேநேரம் இந்தியாவில் இருந்து கொரோனாத் தொற்று இலங்கைக்கு அதிலும் குறிப்பாக வடபுலத்துக்கு வருவதைத் தடுப்பதாக இருந்தால் கடற்படை, நம் கடற்றொழிலாளர்கள், கடல் சூழ் பிரதேசத்து மக்கள், சுகாதாரத்துறை என்ற தரப்பினரின் பூரண ஒத்துழைப்புத் தேவையாக இருக்கும்.

எதற்கும் அண்டை நாடான இந்தியாவிலிருந்து கொரோனாத் தொற்று இங்கு பரவலாம் என்ற ஆபத்தை எவரும் மறவாதிருக்க வேண்டும்.

# பொலிஸ் காவலில் சித்திரவதைக்குள்ளானவருக்கு 2 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் காவலில் சித்திரவதைக்குள்ளானதாக அடிப்படை மனித உரிமை மீறல் தாக்கல் செய்த முன்னாள் இராணுவச் சிப்பாய்க்கு, 2 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

குறித்த சிப்பாய் இராணுவத்தை விட்டு வெளியேறி, ஆயுர்வேத மருந்தகத்தில் தொழிலாளியாக பணிபுரிந்து வந்தார்.

இதன்போது, காரணமின்றி சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டதாக 2013 இல் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்தார்.,

உயர் நீதிமன்ற நீதிபதிகள் பிரியந்த ஜெயவர்த்தன, எஸ்.துரைராஜா, டெஹிதெனிய ஆகியோர் அடங்கிய ஆயம் குறித்த வழக்கை விசாரணை செய்தது. மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் இந்த தாக்குதல்கள் நடந்ததை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது. மனுதாரருக்கு எதிரான ஆதாரங்களை வெளிக்கொணர பொலிஸார் தவறிவிட்டனர் என்பது உச்ச நீதிமன்றத்தில் தெரிய வந்தது.

கொடூரமான சித்திரவதைக்கு எதிராக சர்வதேச உடன்படிக்கைகளில் இலங்கை கையெழுத்திட்டுள்ள நிலையில் பொலிஸ் காவலில் உள்ள சந்தேக நபர்கள் இதுபோன்ற துன்புறுத்தல்களை எதிர்கொள்வதை தடுப்பதற்கான நடைமுறை தீர்வுகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நீதிபதி பிரியந்த ஜெயவர்த்தன வலியுறுத்தினார். (ஜ-4-8)

# ஏழைகளிடமிருந்து பறித்து செல்வந்தர்களுக்கு வழங்கும் வரிக்கொள்கையே தற்போதுள்ளது

### அரசை சாடிய மத்தும

(கொழும்பு)

அனைத்துத் தரப்புகளையும் பகைத்துக்கொண்டு, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இந்த அரசாங்கம் பலவீனமாக செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொத்மலையில நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கூட்டணியொன்றை அமைக்கவும் பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைக் களமிறக்கவும் அவருக்கு தேவையான செயலாளர் ஒருவரை நியமிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவே ஒப்புதல் வழங்கியது.

ரணில் விக்கிரமசிங்க வழங்கிய கடிதமும் இருக்கின்றது.

எனவே, நாம் தவறிழைக்கவில்லை. எம்மை நீக்கி ரணில் தரப்பே தவறிழைத்துள்ளது. இதற்கு எதிராக நீதிமன்றம் சென்றோம். தீர்ப்பு விரைவில் வரும்.

ஐக்கிய தேசியக்கட்சி என கூறிக்கொள்ளும் தரப்பு எமக்கு பிரதிவாதியல்ல. மொட்டுக்கட்சியினரே எமது பிரதிவாதி. அவர்களுடனேயே எமக்கு அரசியல் சமர் இருக்கின்றது.

நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் எமது பக்கமே இருக்கின்றனர். ரணில் தரப்பு என்பது கட்சியின் பெயரை மட்டுமே வைத்துக்கொண்டுள்ளது. கிராம மட்டத்திலும் எமக்கான ஆதரவே இருக்கின்றது.

ஆறு மாதங்களில் தம்மால் முடியாது என்பதை அரசாங்கம் நிரூபித்து விட்டது. விவசாயிகளுக்கு உரத்தை வழங்கவில்லை. அரிசிக்கு உரிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க முடியாமற்போனது. அரச ஊழியர்களின் சம்பளம் பறிக்கப்படுகின்றது.

ஆக, மொத்தத்தில் ஏழைகளிடமிருந்து பறித்து செல்வந்தர்களுக்கு வழங்கும் வகையிலேயே அரசாங்கத்தின் வரிக்கொள்கை அமைந்துள்ளது" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# கடற்படையினர் மீது தாக்குதல் சம்பவம் சந்தேக நபர்கள் பிணையில் விடுவிப்பு

(குப்பிழான்)

அனலைதீவில் கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்றுஇளைஞர்கள்நேற்று புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அனலைதீவு கடற்படையினர் இருவர் கடந்த 9 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு கடற்படையினர் மீது ஒரு குழுவினர் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தி னர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த இரு கடற்படையினரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தையடுத்து அனலைதீவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 3 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது அவர்கள் அடையாள அணிவகுப்புககு உட்படுத்தப்பட வேண்டுமென்ற காரணத்தால் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். (4-5-18)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**வினைப்பயனை ஒருவன் அனுபவித்தே தீர வேண்டும். யாரும் அதில் இருந்து தப்பிக்க முடியாது. ஆனால் ஜெபம், வினைப்பயனின் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக ஒருவனுக்கு முன்வினைப்படி காலை இழக்க வேண்டும் விதியாக இருப்பின் ஜெபத்தால் அவன் காலில் ஒரு முள்ளாவது குத்தவே செய்யும். -சாரதாதேவி**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்** தில சாளம்பைக்குளம் ஒரு பகுதி, பகல அளுத்வத்த கிராமம், தவசிகுளம் கிராமம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சத்திய தரிசனம்

### நல்லதை மட்டும் காண்போம்



❖ வாழ்வு நிரந்தரமானது என்று எண்ணுவது அறியாமை. இதனால் தான் பொன்னையும, பொருளையும் தேடி அலைந்து வாழ்நாளை வீணாக்குகிறோம்.

❖ மனம் என்னும் வீட்டில், தூய்மையற்ற சிந்தனை நுழைநதால், இதயத்திரையில் கறை படிந்து விடும்.

❖ நல்ல திசையில் மனதைத் திருப்புங்கள். நல்லதை மட்டுமே எப்போதும் காண முயலுங்கள்.


❖ பூமிப்பந்தில் பாதி இருட்டாகவும், பாதி ஒளியாகவும் இருப்பது போல, வாழ்விலும் இன்ப, துன்பம் சரி பாதியாக கலந்திருக்கிறது.

❖ வாழ்க்கை என்பது ஒரே திசையில் செல்லும் நீரோட்டம். அதனால், ஒவ்வொரு நாளையும் பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்.

❖ ஜெபம், தியானம், பஜனை போன்றவை விலை மதிப்பு மிக்க ரத்தினங்கள். அவற்றின் மூலம் மனதை ஒருமுகப்படுத்தி கடவுளை அடைய முயலுங்கள்.

❖ நமக்கு எது தேவையோ அதைத் தர கடவுள் தயாராக இருக்கிறார். ஆனால், அதைப் பெறும் தகுதியை வளர்த்துக் கொள்வது அவசியம்.

# இலங்கையின் பூர்வீகக் குடிகள் சைவத் தமிழ் மக்களே



## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

- மகாவம்சம் வரலாற்று நூல் அன்று
- இதுவரைக்கும் தமிழர்களுக்கு எதிராக நடந்து வந்திருப்பது இனப்படுகொலையே
- எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியாலும் தமிழர்களுக்கான தீர்வைத்தர முடியாது

கொழும்பு ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி தொடர்பாக நீதியரசர் விக்னேஸ்வரனால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில்.

**கேள்வி:-** நீங்கள் கொழும்பில் இருக்கும் போது பல வருடங்களாக சமய சமூக மற்றும் இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு பேசி வந்தீர்கள். தற்போது அரசியலில் இறங்கியதால் அரசியல் காரணங்களுக்காக உங்கள் பேருக்குக் களங்கம் ஏற்படுத்தி வருகின்றார்கள். உங்கள் சமய அறிவுப்படி, அரசியல் அனுபவத்தின் படி தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிட்டுமா?

**பதில்:-** நிச்சயமாக! நாம் எதிர்பார்க்கும் எல்லாம் கிடைக்காவிட்டாலும் தமிழர்கள் மதிப்புடனும் மாண்புடனும் வாழ வழி வகுக்கப்படும். சூரியன் அஸ்தமிக்கும் போது இனி எந்நாளும் இருளே தொடர்ந்திருக்கும் என்று நாம் எண்ணுவதில்லை. அடுத்தநாள் மீண்டும் ஆதவன் உதிப்பான் என்ற நம்பிக்கை எம்முள் இருக்கும். அதேபோல் தான் இதுவும். தமிழர்கள் மாண்புடன் வாழும் காலம் கட்டாயம் வரும் என்று நம்பிக்கை கொள்ளுங்கள்.

உங்கள் கேள்விக்கு சமய ரீதியாகப் பதில் கூறுவதானது என்னை அரசியல் ரீதியாகப் பாதிக்கும். என்றாலும் என்னிடம் கேட்கும் கேள்விகளுக்கு எனக்கு தெரிந்த பதில்களை பயப்படாமல் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் நான். அந்த அடிப்படையில் பதில் இறுக்கின்றேன்.

தத்துவஞானம், சமயஞானம் பெற்றவர்கள் உலகைப் பார்க்கும்விதம் வேறு அரசியல்வாதிகள் பார்க்கும் பார்வை வேறு. அதை நாங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சீதாப்பிராட்டியாரின் தந்தை ஜனகமகாராஜா ஒரு ஆத்மஞானி. ஆனால் அரசர். அவ்வாறானவர்களின் மனமானது தாமரை இலைமேல் தண்ணீர் போல் இருப்பன. பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும் அவர்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருக்கும்.

மகாபாரதத்தின் யுதிர்ஷ்டிரர் பற்றி ஒரு கதை உண்டு. அவருக்கு இரண்டு நண்பர்கள். தர்மரின் ஆன்ம தந்தையாரான யமதர்மராஜன் மகனைத் தன் மானிட உடலுடன் மேல் உலகம் எடுத்துச் செல்ல விரும்புகின்றார். தர்மரிடம் இதைக் கூறுகின்றார். அப்போது தர்மர் "என் இந்த இரு நண்பர்களையும் உடன் கூட்டிவருவேன். அதற்கு நீங்கள் ஒத்துக் கொண்டால் நான் வருகின்றேன்" என்றார். "அது எப்படி? அவர்களுக்கு சுவர்க்கம் அடைய இன்னும் காலம் வரவில்லையே?" என்று கூறினார் யமதர்மராஜர். "அப்படியானால் நான் வரவில்லை. நீங்கள் என்னை மற்றவர்கள் போல் அழைத்துச் செல்லலாம்" என்றார் தர்மர். சரியென்று நண்பர்களையும் அழைத்துச் செல்ல உடன்படுகின்றார் யமதர்மராஜர். தர்மர் முதலில் மேல் நோக்கிச் செல்வார். **மற்றவர் ஒருவர் தர்மரின் காலைப்** பற்றிக்கொள்ள வேண்டும். அவரின் காலை மூன்றாமவர் பற்றிக் கொண்டு மேல் செல்லலாம் என்று உடன்பாடு எய்தப்பட்டது.

சுவர்க்கப் பயணம் தொடங்கியது. மூன்று பேரும் மேலெழுந்து செல்கின்றார்கள். உடனே யமன் ஒரு வேடன் ரூபம் எடுத்து மர உச்சியில் இருந்த ஒரு அழகான பறவையை அம்பெய்து கொல்கின்றார். பறவை பிணமாக விழுகின்றது. மேல் போய்க் கொண்டிருக்கும் மூன்றாமவர் உடனே "அட பாதகா! அநியாயமாக அந்தப் பறவையைக் கொன்று விட்டாயே" என்றுகோபத்தில் அலறுகின்றார். அவர் தமது கோபத்தால் தமது பிடியைத் தளர்த்தி மேலிருந்து கீழே விழுந்து விடுகின்றார். இரண்டாமவர் "அடபாவமே! இந்த அழகான பறவை கொல்லப்பட்டு விட்டதே. என்னே இவன் கொடூரமான செயல்?" என்று பரிதாபப்படுகின்றார். அவரின் மனவருத்தத்தால் அவரின் பிடிதளர்ந்து அவரும் விழுகின்றார். தர்மரோ தனியே சுவர்க்கம் நோக்கி செல்கின்றார். அவரின் மனதில் சலனம் இல்லை. அவர் மனோநிலை வேறு. உலக நடப்பைக் காண்கின்றார். கொல்வதும் உண்பதும் வேடர் வாழ்க்கை. வாழ்வதும் மடிவதும் உலக வாழ்க்கை. உலகின் நடத்தைகளைக் கண்ணெதிரே கண்டும் அவர் தம்மை அவற்றோடு இணைத்துவிடவில்லை. உலகைச் சாட்சியாகப் பார்க்கப் பழகிக் கொண்டிருந்தார். அதுதான் சாட்சி/பாவம் என்பது. அவருக்குக் கோபமும் இல்லை. பரிதாபமும் இல்லை. தாமரைமேல் நீர் என்பது இதைத்தான்.

கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் கூறுகின்றார். "வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே-முனிவின் இன்னாதென்றலும் இலமே" என்று. அதாவது யாம் வாழ்தலை இனிதென்று மகிழ்வதும் இல்லை. யாம் வெறுப்பால் வாழ்வு இனியாது என்று இருப்பதும் இல்லை என்கிறார்,

ஏன் இதைக் கூறுகின்றேன் என்றால் ஆன்மஞானம் பெற்ற ஒருவரின் மனம் சலனமடையாமல் தாமரை இலைமேல் தண்ணீர் போல் இருக்கும். ஆனால் அரசியல்ஞானம்மட்டும்பெற்ற ஒருவர்எதனையும் எதிர்வினையுடனேதான் பார்ப்பார். எதனையும் கண்டு அதற்குப் பதில் உரைக்கவும் போட்டி நடவடிக்கை எடுக்க வுமே பார்ப்பார். அவரால் அதற்கு அப்பால் பார்க்க முடியாது. ஆகவே உங்கள் கேள்விக்குப் பதில் அளிக்கும் போது ஆன்ம ஞானம் பெற்ற ஒருவர் ஒருவிதமாகவும் அரசியல் ஞானம் பெற்றவர் இன்னொரு விதமாகவும் பதில் இறுப்பது தவிர்க்க முடியாதது.

பல ஆன்ம குருமார்களிடம் இருந்து உபதேசம் பெற்ற ஒருவரின் பதில் அரசியலையும் உள்ளடக்கிய பிரபஞ்சப் பார்வையுடனானதாக இருக்கும் என்று நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அரசியல்வாதிகளின் **பார்வை அதில் ஒரு சிறுகோணமே** தவிர முழுமை பெற்ற பார்வையன்று.

இனி கேள்விக்கு வருவோம்.

### தமிழ் மக்களுக்குத் தீர்வு கிட்டுமா?

ஆன்மீக அடிப்படையில் பார்ப்பதென்றால் பலகோணங்களில் இருந்து இது பார்க்கப்பட வேண்டும். எமக்கு வேண்டுபவை இவை தான் என்று ஒரு சாரார் கூறும் போது தமக்கு வேண்டுபவை இவையென இன்னொரு சாரார் கூறுவது தான் உலக வழக்கம். இது இருமையின் தாக்கம். நல்லது-கெட்டது, நன்மை-தீமை, வெள்ளை- கறுப்பு என்று பிரிவினையுடன் தான் நாம் மானிடர்களாய் சிந்திக்கின்றோம். அதனால்தான் உலகைத்தில் கருத்து வேற்றுமைகளும் கலவரங்களும் உண்டாகின்றன. இவற்றிற்கு அடிப்படையாக இருப்பது சுயநலமே. அது அகந்தைபாற்பட்டது. தரப்பார் ஒவ்வொருவரும் விட்டுக் கொடுக்காது இருந்தால் அவர்களிடையே இருக்கும் பிணக்குத் தீராது. பதிலாக அது வலுவடையும். இதை இருதரப்பாரும் உணர வேண்டும். ஆனால் உணர்ந்தும் தமது சுயநல சிந்தனைகளில் இருந்து விடுபட முடியாமல் அவர்களைத் தடுப்பது அவர்களின் கர்மவினை. காலம் கனியும் போது கர்ம வினையின் தாக்கம் குறையும். திடீரென நிலைமை மாறும். அந்த மாற்று நிலை விரைவில் வரும் என்பது எனது கணிப்பு.

சில நாட்களுக்கு முன்பதான பத்திரிகையின்படி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கான தீர்வைத்தான் மட்டும் தரமுடியும் என்று கூறியுள்ளார். அது அவரால் முடியாது. ஏன் என்றால் அவருக்குத் தமிழர்களின் பிரச்சினை என்னவென்றே தெரியாது. பின் எப்படி தமிழர்களின் பிரச்சினைக்குத் தானே தீர்வைத் தரப் போவதாக அறிவிப்பது? எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியாலும் தமிழர்களுக்கான தீர்வைத்தர முடியாது. அப்படி தருவதானால் அவர்கள் பின்வரும் உண்மைகளை ஏற்க வேண்டி யிருக்கும். அவர்களால் அவற்றை ஏற்க முடியாது. அவர்களின் அகந்தை, அறியாமை போன்றவை அதற்கு இடம் கொடுக்காது.

அவையாவன:

1. இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் சைவத் தமிழரே. சரித்திர ரீதியாக இதில் எந்தவித மயக்கமும் இல்லை.

2. அவர்கள் தொடர்ந்து இலங்கையின் மேற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளார்கள்.

3. மகாவம்சம் வரலாற்று நூல் அன்று. அது பௌத்தத்தை மாண்புறச் செய்ய எழுதப்பட்ட புனை கதை. அது பாளியில் எழுதப்பட்டது. அது எழுதப்பட்ட போது சிங்களவர்களும் இருக்கவில்லை, சிங்கள மொழியும் இருக்கவில்லை.

4. சிங்களமொழி ஒரு மொழியாக பரிணாமம் பெற்றது கி.பி. 6 ஆம் அல்லது 7 ஆம் நூற்றாண்டிலேயே.

5. பிரிட்டிஷார் 1833 இல் நாட்டை நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கும் வரையில் தமிழ் பேசும் மக்கள் தமக்கென இராச்சியங்களை அமைத்து வடக்கு-கிழக்கில் 3000 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து குடியிருந்து வந்துள்ளார்கள். கிழக்கில் கண்டி அரசர்களுக்கு சில சமயங்களில் திறை செலுத்தினாலும் கிழக்கில் வாழ்ந்து வந்தவர்கள் தமிழரே.

6. இதுவரையில் தமிழருக்கு எதிராக நடந்து வந்திருப்பது இனப்படுகொலையே.

இவற்றை ஏற்காது எந்தச் சிங்களத் தலைவராலும் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வைத்தர முடியாது. வேண்டுமானால் இவ்வளவுதான் தரலாம் என்று தமது எச்சில் இலையில் உள்ள எலும்புகளை எமக்குத் தூக்கிப் போடலாம். தமிழர்கள் சிலர் அதனை ஏற்கச்சித்தமாக உள்ளார்கள். ஆனால் பெரும்பான்மைத் தமிழர்கள் தம்முடைய மாண்பையும் மதிப்பையும்நெடிய இருப்பையும்ஏற்றுக் கொள்ளும்ஒரு தீர்வையே ஏற்றுக் கொள்வார்கள். ஐரோப்பாவில் 100 வருடப் போர் நடந்தது. அயர்லாந்து மக்கள் பல வருட காலம் போர் புரிந்து வந்துள்ளார்கள்." அதே போன்று தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறும் வரையில் போராடுவார்கள். தமிழர்கள் தமக்கிருக்கும் உண்மையான, நீதியான, நியாயமான உரித்துக்களை முன்வைத்தே தமது தீர்வுகளைக் கேட்கின்றனர். அதனை வழங்காது சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி வந்தால் 100 வருடத்திற்கும் தொடர்ந்து போராட்டம் நடத்த தமிழ் மக்கள் உள்ளுறுதி கொண்டிருக்கின்றனர்.

கேப்பாபிலவு மக்களின் மன உறுதியையும் விடாமுயற்சியையும் உலகம் அறியும். இன்று நாளை நாங்கள் போய் விடலாம். ஆனால் எமது வம்சத்தில் உதிப்பவர்கள் 100 வருடத்திற்கு மேலும் போராட்டத்தை நடத்துவார்கள் - தமது நீதியான உரித்துக்கள் கிடைக்கும் வரை!

இதனை உணர்ந்து சிங்களத் தலைவர்கள் நியாயமான தீர்வொன்றை வெகுவிரைவில் கொண்டு வந்து அதன் அடிப்படையில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. காரணம் அவர்களுக்கு உலக நெருக்குதல்கள் கூடிக் கொண்டு வருகின்றன. பொருளாதாரம் சிதைந்து வருகின்றது. தமிழர்களுடன் ஒப்பந்தம் செய்யாவிட்டால் தாம் இன்னொரு நாட்டின் அடிமையாக நேரிடும் என்ற பயம் பீடித்துள்ளது. எமது புலம் பெயர் மக்களின் இன வழியான ஈடுபாடு அவர்களை மலைக்க வைத்துள்ளது. இவற்றைவிட தாம் இதுகாறும் தமிழர்களுக்கு இன்னல்களையும் இடர்பாடுகளையும் இடைஞ்சல்களையும் கொடுத்து வந்துள்ளோம் என்ற எண்ணம் இவர்களிடையே மேலோங்கி வருகின்றது.

இனப்படுகொலையை ஏற்காவிட்டாலும் படுகொலைகள் பல தமிழருக்கெதிராக தம்மால் நடத்தப்பட்டன என்ற உண்மை அவர்களுள் உறைக்கத் தொடங்கியுள்ளது. இதனைச் சிங்கள சகோதர, சகோதரிகளே அவர்களுக்கு இடித்துரைத்து வருகின்றனர். சில வருடங்களுள் ஒரு சிறந்த தீர்வை எதிர்பார்க்கலாம் என அவரால் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2-4)

## தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்...

நிகழ்கால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

அரசியலமைப்பு திருத்தம், தமிழ் மக்களின் அடிப்படை பிரச் சினைகளுக்கான தீர்வு ஆகிய வற்றை குறிப்பிட்டுக் கொண்டு கூட்டமைப்பினர் அரசியலில் செல் வாக்கு செலுத்துகிறார்கள்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அடிப்படை பிரச் சினைகளுக்கு தீர்வு காண கூட் டமைப்பினர் எக்காலங்களிலும் உரிய நடவடிக்கைகளை முன் னெடுக்கவில்லை. இதற்கு நல் லாட்சி அரசாங்கத்தினை ஒரு உதாரணமாக குறிப்பிடலாம்.

முரண்பாடுகளை தோற்று விக்கும் காரணிகளை அடிப்படை யாகக் கொண்டு அரசியலமைப் பினை திருத்தவும், நாட்டின் இறை யாண்மைக்கு பங்கம் விளை விக்கும் விதத்தில் தமிழ் மக்களுக் கான தீர்வையும் கூட்டமைப்பினர் கோருகிறார்கள். இதனை ஒரு போதும் செயற்படுத்த முடியாது. அரசியலமைப்பின் 19வது திருத் தம் திருத்தியமைக்கப்பட வேண் டும், அல்லது முழுமையாக மாற்றி யமைக்கப்பட வேண்டும் என குறிப் பிடப்படுகிறது.

புதிய அரசாங்கத்தில் அரசிய லமைப்பின் 19வது திருத்தம் தொடர்பில் எழுந்துள்ள யோசனை கள் முழுமையாக பரிசீலனை செய்யப்படும். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். இந்த தீர்வு அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டதாக அமையாது. அனைத்து தரப்பினரும் ஏற்று கொள்ளும் விதத்தில் தீர்வு முன்வைக்கப் படும்.

புதிய அரசாங்கம் அனைத்து இன மக்களையும் ஒன்றுபடுத் தியதாக அமைய வேண்டும் என வும், அதற்கான செயற்திட்டங் களை செயற்படுத்துமாறும் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோ சனை வழங்கியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமை யிலான அரசாங்கத்தில் அனைத்து இன மக்களும் உரிமை கொள்ள வேண்டும் என்பதே எமது நிலைப் பாடு என்றார். (ம-3)

## இராணுவம்...

மித்து கச்சாய் வீதியில் இச் சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் போது வீதியில் மோட் டார் சைக்கிள் உள்ளிட்ட வாக னங்களில் பயணிப்பவர்கள் பதிவு செய்யப்படுவதுடன், கொண்டு செல்லும் பொதிகள் மற்றும் வாக னம் ஆகியனவும் கண்காணிக் கப்படுகின்றன.

காலை மற்றும் மாலை வேளை களில் மாத்திரமே குறித்த வீதிச் சோதனைச் சாவடிகளை அவ தானிக்க முடிகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-3.30)

## வடமராட்சி...

களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இமையாணன் மேற்கை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை யான அரசன் செல்வராசா (வயது-51) என்பவரே மரணமடைந்தவரா வார்.

கடந்த 14 நாட்களுக்கு முன்னர் கொரோனா தொற்று ஏற்பட்டு சவுதி அரேபியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அங்கு உயிரிழந்துள்ள தாக உறவினர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது. (ம-3.60)

## நில அளவை திணைக்களத்திற்...

வெளியிட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ35 மற்றும் ஏ9 தர வீதிகளிலி லும் இந்த முதன்மை வீதிகளில் இருந்து பிரிந்து செல்லும் கிளை வீதிகளில் மக்களுக்கு சொந்தமான காணிகளில் எல்லைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட நில அளவைத்திணைக் களம் ஈடுபட்டுள்ளதால் மக்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள் ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச சபைகளிடம் அனுமதி எடுத்து கடைகள், வீடுகள், மதில்கள் மக்களால் கட்டப்பட்டுள்ள நிலை யில் நில அளவைத் திணைக்களத் தினர் எல்லைப்படுத்தி காணிகளை அபகரித்து வருகின்றார்கள்.

இந்நிலையில் தண்டுவான் பகுதியில் நில அளவைத் திணைக் களத்தின் நடவடிக்கை முன்னெ டுப்பிற்கு கிராம மக்கள் ஒன்றி ணைந்து எதிர்ப்பினை வெளிப் படுத்தி நில அளவை திணைக் களத்தின் எல்லைப்படுத்தல் நட வடிக்கையினை முன்னெடுக்க விடாமல் தடுத்து நிறுத்தியுள்ளார் கள்.

மக்கள் கூட்டத்தினை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு ஒட்டுசுட்டான் பொலிஸார் சென்றனர்.

பொலிஸாரால் மக்களின் பிரச் சனையினை சுமூகமாக்க முயற் சித்த வேளை மக்களின் எதிர்ப் பினை தொடர்ந்து இது குறித்து பிரதேச செயலாளரிடம் இன்று எழுத்து மூலம் முறைப்பிடவுள்ள தாகவும் இதன்போது நில அள வைத் திணைக்கள அதிகாரியும் வருகை தரவுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ம-3.281)

## பாரவூர்தி உரிமையாளர்கள்...

உரிமையாளர்களுக்கு மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப் பட்ட நிலையில் 40க்கும் மேற்பட்ட பாரவூர்திகளுக்கு திடீரென மணல் அகழ்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அத்துடன் பாரவூர்த்தி சங்கத் தின் சில வாகனங்களுக்கு அரசி யல் கட்சி சார்பாக பாரவூர்த்தி களுக்கு மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த உள்ளூர் பாரவூர்த்தி உரிமையாளர்கள் நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-3)

## புலோலி காந்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சிவபுண்ணி யம் தேவராஜ் (வயது-22) புவ னேஸ்வரன் குகராஜ் (வயது-19) ஆகிய இருவரும் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இதேவேளை அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றும் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸார் தெரி வித்தனர். (ம-3.60)

## தேர்தல் விதியை மீறினால் கடும்...

யாழ்ப்பாண மாவட்ட செயல கத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தேர்தல் திகதி அறி விக்கப்பட்டு தேர்தலுக்கான பணி கள் மும்முரமாக நடைபெற்று வரு கின்றன.

தேர்தலில் போட்டியிடும் வேட் பாளர்கள், அரசியல் கட்சிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தினை கருத்தில் கொண்டு செயற்படுமாறு தேர்தல்கள் திணைக் களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ள னர்.

தேர்தலில் போட்டியிடும் வேட் பாளர்களின் பதாகைகள் பொது இடங்களில் காணப்பட்டால் அவற்றை உடனடியாக அகற்றுமாறு பொலி ஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்தில் கம்ரெலிய திட்டத்தின் போது நாட்டப்பட்டுள்ள பதாகைகளில் உள்ள அரசியல்வாதிகளின் படங் களை ஸ்டிக்கர் ஊடாக மறைக்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் அவை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பொதுமக்கள் பயன்படுத்தும் வீதிகளில் வேட்பாளர்களின் பெயர் கள், கட்சியின் சின்னம் ஆகியன வரையப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த செயற்பாடானது முற்றி லும் தேர்தல் சட்டத்திற்கு முரணான செயற்பாடாகும்.

எனவே அவ்வாறான செயலில் ஈடுபடுபவர்கள் மீது தேர்தல் சட்டத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுக் கப்படும் என்றார். (ம-3)

## தேர்தல் பிரசா...

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதி யில் நேற்று மாலை பல இளை ஞர்களை அழைத்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட் பாளர் ஒருவர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன் போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் கலந் துரையாடலில் கலந்துகொண்ட 16 இளைஞர்களை கைது செய்துள்ள னர். மேலும் 4 மோட்டார் சைக் கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸார் கைது செய்ததை அடுத்து சம்பவ இடத்தை விட்டு வேட்பாளர் விலகிச் சென்றுள்ளார்.

சுகாதார விதிமுறைகளை பின் பற்றாததாலேயே குறித்த இளை ஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரி வித்துள்ளன. (ம-3.32)

## 15 தேர்தல் விதிமுறை மீறல்...

யாழ்ப்பாணத்தில் தேர்தல் அறி விக்கப்பட்டதிலிருந்து இன்று வரை (நேற்று) ஒரு தேர்தல் வன்முறைச் சம்பவம் உட்பட 15 தேர்தல் விதி முறை மீறல் முறைப்பாடுகள் கிடைக் கப்பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமரராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

யாழ்ப்பாணத்தில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின் னர் 15 தேர்தல் விதிமுறை மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன.

அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதி களை மீறியதற்கான முறைப்பாடு கள் ஆகும்.

எனினும் ஒரேயொரு தேர்தல் வன்முறைச் சம்பவம் பதிவாகி யுள்ளது. அது அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனத்தாக்குதல் சம்பவம் பதிவாகியுள்ளது. இதனை விட பாரிய சம்பவங்கள் எவையும் இதுவரை பதிவாகவில்லை என் றார். (ம-3)

## கிணற்றிலி...

அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்று நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை துப்பரவு செய்யப் பட்டது.

அப்போது அதற்குள் இருந்து ஒரு துப்பாக்கி மீட்கப்பட்டிருந்தது. இதனையடுத்து நீதிமன்ற உத்தர விற்கு அமைய விசேட அதிரடிப் படையின் உதவியுடன் நேற்று புதன் கிழமை அக் கிணறு சோதனை யிடப்பட்டது.

இதன் போது மேலும் ஒரு துப் பாக்கியும் மூன்று குண்டுகளும் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப் பட்டுள்ளது. (ம-3.60)


ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2834 வர்ணம் பச்சை திகதி 17.06.2020
வெற்றி இலக்கங்கள் 17 25 38 47 மேடம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,000,000/=
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 953
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.06.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,155,665/-
வெற்றி இலக்கங்கள் 20 61 65 71 ஆங்கில எழுத்து F

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3326 திகதி: 2020.06.17
ஊதா புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 10 26 45 ஆங்கில எழுத்து O
அடுத்த சனிக்கிழமை ஜக்பொட் 30,247,898.50

வெற்றி வாரம் 341
வர்ணம் நீலம்
திகதி 17.06.2020
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 22.04.2020 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 18 63 70 விதி எண் 1
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 54,192,264
5 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

மஹஜன சம்பத
திகதி 2020/06/17
சீட்டிழுப்பு இலக்கம் 4157
D 1 7 9 1 7 8

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 17-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2451
Q 22 23 38 69

மெகா பவர்
திகதி 17/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 526
H 23 38 63 67 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17-06-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1029
Z 3 9 1 0 6 3

# கொரோனாவின் 2ஆவது அலைக்கு பொதுத் தேர்தல் வழிவகுக்குமா?

## லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி

***(கொழும்பு)*** **கொரோனா வைரஸ் தொற்றின் 2ஆவது அலை அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் தொடர்ந்தால், அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்தக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நாட்டில் தேர்தலை நடத்த முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியிருந்தாலும், இரண்டாவது அலையின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடிக்கிறது என்றும் கூறினார்.

மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தேர்தலை நடத்தும் நிலையில் நாடு இருக்கிறதா என்பது குறித்து அரசாங்கம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கேட்டுக் கொண்டார்.

மேலும் தேர்தலில் வேட்பாளர்கள் பெரும் தொகையை செலவிட வேண்டியிருக்கும், எனவே இதுபோன்ற முடிவுகளை இலகுவாக எடுக்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்காளர் சதவீதம் 40% க்கும் குறைவாக இருக்கும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**பிரத்தியேக வகுப்புக்கள்**

ஆங்கில வகுப்புக்கள் Gr. 6 – 11 வரை வகுப்புக்கள், வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். கணித பாடமும் கற்பிக்கப்படும்.

ஆசிரியர்:- **தி.ஞானேஸ்வரன்**

**076 524 4793** (3045)



**ஆயுர்வேத வைத்தியர் தேவை**

ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் யாழ்.நகரில் பணியாற்றுவதற்கு ஆயுர்வேத பெண் வைத்தியர் உடன் தேவை.
**(புதிதாக பட்டம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது)** (C-9715)

**077 912 8944**



**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்**

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

**0768226240**



**பெண் வேலையாள் தேவை**

யாழ்.நகரில் உள்ள வீடு ஒன்றுக்கு சமையல் வேலைக்கு மட்டும் பெண் வேலையாள் தேவை.
**(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)** (3048)

தொடர்பு:- **077 918 4988**



**வீடு வாடகைக்கு உண்டு**

1500 சதுர அடி சகல வசதிகளையும் கொண்ட வீடு கைதடிச் சந்தி A9 வீதியில் வாடகைக்கு உண்டு.
**(களஞ்சியமாகவும் பாவிக்கலாம்)**

தொடர்புகளுக்கு:- (C-9720)

**077 291 9154**


## மணல் ஏற்றியவர் கைது

(யாழ்ப்பாணம்) அரியாலை பூம்புகார் பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றி வந்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்.பிராந்திய போதைத் தடுப்புப் பிரிவால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

(ம-3,32)


**பணியாளர் தேவை**



சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு

- **றொட்டி வேலை**
- **கொத்து வேலை**
- **பிறைட் றைஸ்**

தயாரிக்கத் தெரிந்த **பணியாளர் தேவை.**

தகுதியுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்

(C-9722) T.P

**077 649 1027**


**31ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்**



மண்ணில் 04 - 08 - 1945

விண்ணில் 19 - 05 - 2020

**அமரர் சபாரட்ணம் சர்வானந்தம்**

கடந்த 19.05.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் **சபாரட்ணம் சர்வானந்தம்** அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.06.2020) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்தும் மற்றும் உலகின் பல பாகங்களில் இருந்தும் தொலைபேசி வழியாகவும் மற்றும் சமூக இணையத்தளங்கள் ஊடாகவும் எம்மை அழைத்து அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் மற்றும் நோயுற்றவேளை மிகுந்த கரிசனையுடன் பார்த்த வைத்திய நிபுணர்கள், வைத்திய ஊழியர்கள், மிகுந்த பரிவு காட்டிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி. மற்றும் அன்னாரின் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டோர், கூட நின்று உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மற்றும் கொக்குவில் மேற்கு ஐயனார் கோவில் இந்து இளைஞர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

**ஐயனார் கோவிலடி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.** (3030)

நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

**31வது நினைவுநாள்**



தோற்றம் 1933 - 02 - 15

மறைவு 2020 - 05 - 22

**கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை**

**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

புதுக்குடியிருப்பின் புகழ்பூத்த ஆசிரியரும், தமிழ் வித்தகரும், ஊரின் உபதேசியும் அறம் மாறாத மூத்த கலைஞனுமாகிய எம் தெய்வத்தின் 31ம் நாள் நினைவு, நாளை (2020.06.19ம் திகதி) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் அறிவித்தலை ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். இவ் அறிவித்தல் பொது அறிவித்தலாக தெரிவிக்கப்படுகிறது.

*குறிப்பு:* மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**7ம் வட்டாரம்,**
**மூ/புதுக்குடியிருப்பு.** (C-9711)

தகவல்:-
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.